
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர்: 14 இதழ் 6 | மே, 1962 | விலை: சதம் 15



# அட்டைப்படம்



முன்னைய வருடங்களைப் போல இவ்வருடமும் "வெசாக்" விழா கோலாகலமாகத் தீவு முழுவதிலும் கொண்டாடப்பட்டது. பௌத்தர்கள் பக்தி சிரத்தையுடன் விரதமிருந்து, ஆலயங்களுக்குச் சென்று புஷ்பாஞ்சலி செய்து, புத்தர் பிரானைப் பிரார்த்தித்தனர். பிக்குமாருக்கும், ஏழைகளுக்கும் தானம் பல வழங்கப்பட்டன.

நகர்ப்புறங்கள் பல மின் விளக்குகளாலும், இதர ஜோடனைகளினாலும் ரம்மியமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கும் பல ஜோடனை வளைவுகள் நிறுவப்பட்டிருந்தன. இவற்றை எல்லாம் மக்கள் பார்த்து ரசிப்பதற்கு மூன்று நாட்கள் விடாது பெய்த மழை ஓரளவு தடையாக இருந்தது.

முன்னெப்போதும் இல்லாத நிகழ்ச்சிகள் பல இவ்வருட வெசாக் விழாவின்போது, இராணி மாளிகையில் இடம்பெற்றன. மாட்சிமை தங்கிய தேசாதிபதியும் பாரியாரும், புத்த பிக்குமாருக்குத் தானம் வழங்கினர். இராணி மாளிகையில் ஆறு வர்ணங்களைத் தாங்கிய பௌத்த கொடி வானளாவப் பறந்துகொண்டிருந்தது. புனித புத்தரின் தூய வெண் சிலை ஒன்று இராணி மாளிகையில் இப்போதுதான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மகா தேசாதிபதி அவர்கள் புத்தர் சிலைக்கு முன்னிலையில் மலர்தூவி மெழுகுவர்த்தி ஏற்றித் துதிப்பதை அட்டைப்படம் சித்தரிக்கிறது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சோஷலிஸ இலங்கையொன்றை நிறுவ உதவுக .. .. | 3 |
| 2. | பொருளாதார மீட்சிக்கு நடுவழி .. .. .. | 4 |
| 3. | உலர் வலய வெற்றிலைச் செய்கை .. .. | 7 |
| 4. | ஹஸ்தி சைலபுரம் குருநாக்கலானமை .. .. | 10 |
| 5. | கப்பித்தாவத்தை விநாயகர் கோயில் .. .. | 11 |
| 6. | இலங்கைச் சரித்திரக் கதைகள்—மகாபராக்கிரமபாகு.. .. | 14 |
| 7. | சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் .. .. | 20 |
| 8. | அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் முதற் பேரவை .. | 23 |
| 9. | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுத்தாள உலகிற்கு...... .. | 25 |
| 10. | வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள் .. .. | 26 |
| 11. | புத்தக மதிப்புரை .. .. .. | 27 |
| 12. | ஆதித் தமிழகம் .. .. .. | 29 |


R 2993—5,608 (6/62).

# சோஷலிஸ இலங்கையொன்றை நிறுவ உதவுக

**மே தினத்தில் பிரதமரின் வேண்டுகோள்**

" எமது நாட்டின் திட்டமிடப்பட்ட அபிவிருத்திக்கு நீங்கள் எல்லோரும் உங்கள் சேவையை அளிக்கத் தீர்மானிக்க வேண்டும். இதைச் செய்வதனுல், எமது பொது இலட்சியமான சோஷலிஸத்தைப் பெறுவதற்கு நீங்கள் உதவுவதோடு, தொழில்கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களைத் தோற்றுவித்து அதன் மூலம் தொழிலாளர் என்ற முறையில் உங்கள் சொந்த அங்கத்துவத்தைப் பலப்படுத்தவும் நீங்கள் உதவுகிறீர்கள். நிறுவுதலும், ஆக்குதலுமே உங்கள் இலட்சியமாக இருக்க வேண்டும் " என்று சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினுர். அவர் மேலும் பேசியதாவது :—

இங்கு குழுமியிருக்கும் பெருங் கூட்டத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு மகிழ்ச்சி பெருகுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினது தொழிற்சங்கங்கள் நாளுக்குநாள் பலமடைந்துவருவதை இந்த மாபெருங் கூட்டம் உறுதிப்படுத்துகிறது. 1956 ம் ஆண்டு முதல், தொழிலாளர் வகுப்புகளின் இயக்கம் இந்நாட்டில் முன்னேற்றமடைந்துள்ளதுடன் சிறந்த சம்பளங்கள், வாழ்க்கை நிலைமைகள் போன்ற பல சலுகைகளையும் அவர்கள் பெற்றிருக்கிறுர்கள். இந்த ஐந்தாறு வருடங்களுள் நிறைவேற்றப்பட்ட சில சட்ட நடவடிக்கைகள், குறிப்பாகத் தொழிற்சங்க இயக்கத்தைப் பொறுத்தமட்டில், ஆசியாவிலுள்ள முன்னேற்றமான நாடுகளுள் இலங்கைக்கு முதன்மையும், முக்கியத்துவமும் அளித்திருக்கின்றன.

ஆனுல் இந்தக் காலத்துள் அரசாங்கசேவையிலும், வெளியிலும் பெருந்தொகையான வேலை நிறுத்தங்கள் சம்பவித்திருக்கின்றன. இவற்றில் அநேகமானவை திருப்திகரமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. ஆனுல் அற்ப காரணங்களுக்காக அரசியல் நோக்கங்களால் அடிக்கடி தூண்டப்பட்ட பல வேலை நிறுத்தங்களும் இந்நாட்டில் இடம் பெற்றன. இத்தகைய வேலை நிறுத்தங்கள் எமது பொருளாதாரத்துக்குச் சொல்லொணுச் சேதத்தை விளைவித்ததுடன் தொழிற்சங்க இயக்கத்துக்கும் பெரும் அபகீர்த்தியைக் கொணர்ந்துள்ளன.

இந்த நாட்டை ஒரு சோஷலிஸ நாடாக்குவதற்கு நடைபெறும் எங்கள் போராட்டத்தின் முன்னணியில் நிற்க வேண்டியவர்கள் எமது தொழிலாளரும் விவசாயிகளுமே என்பதை நான் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்நாட்டின் சிறப்பான சந்தர்ப்பங்களை யெல்லாம் இதுவரை அனுபவித்து வந்த பிற்போக்குச் சக்திகள் ஒழிக்கப்பட்டுவிட்டன என்று நினைத்து வாளாவிருந்துவிட முடியாது. உண்மையான பிரச்னைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு புதிய இலங்கையை உருவாக்குவதில் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு இடைஞ்சலளிப்பதற்காக மக்கள் மத்தியில் எழக்கூடிய அற்ப வித்தியாசங்கள் அல்லது அதிருப்திகள் , ஒவ்வொன்றையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த அந்தப் பிற்போக்குச் சக்திகள் காத்திருக்கின்றன.

துறைமுகத்திலும், வங்கியிலும் அண்மையில் நடந்த இரண்டு பெரிய வேலைநிறுத்தங்களை நீங்கள் அறிவீர்கள். அந்த நேரம் சட்டபூர்வமாக நிறுவப்பட்ட மக்கள் அரசாங்கத்தை அகற்றுவதற்குச் சரியான தருணமெனக் கருதப்பட்டதுடன் அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சிகள் வெற்றிபெற்றிருந்தால், ஒரு புறத்தில் நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டிருக்கும். மறு புறத்திலோவெனின் பொதுமக்கள் குறிப்பாக தொழிலாளர் வகுப்பினர் மீண்டும் அடிமைகளாக்கப் பட்டிருப்பார்கள். 1956 ம் ஆண்டில் கிடைத்த நன்மைகள் யாவும் சூன்யமாக்கப்பட்டிருக்கும்.

அந்தச் சதித்திட்டத்தின் சிக்கல்களை யெல்லாம் உணர்ந்த துறை முகத்தொழிலாளர் உடனடியாக வேலைக்குத் திரும்பி இந்நாட்டில் முன்னேற்றச் சக்திகளுடன் ஒன்று பட்டுழைக்க முன்வந்தார்கள். நிலைமையை உணர்வதற்கு நமக்கெல்லாம் இது ஓர் நல்ல தருணமாகும். அண்மையில் நடந்த சம்பவங்களை அல்லது அனுபவங்களை நாம் மறந்துவிடலாகாது.

(9 ம் பக்கம் பார்க்க).

# பொருளாதார மீட்சிக்கு நடுவழி

கௌரவ நிதி அமைச்சர்

" தனியார் ஏகபோக உரிமைகள் தோன்றுவதை நாங்கள் எதிர்க்கிறோம். ஏகபோக உரிமைகொண்ட தொழில்களில் வெளிநாட்டு மூலதனம் உள் நாட்டு மூலதனத்துடன் கூட்டாகவோ, அல்லது தனி யாகவோ ஈடுபடுவதற்கு வாய்ப்பளித்தால், இலங் கைக்கு வெளிநாட்டு மூலதனம் வருவதற்கு அது ஒரு தூண்டுகோலாக இருக்கும் எனக் கூறப்படு கிறது. கடந்த காலத்தில் ஏற்பட்ட எமது பொருளா தார அபிவிருத்தியின் வரலாற்றில் அத்தகைய கூற்றுக்கு ஆதாரமில்லை ".

இவ்வாறு நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கை வர்த்தகர் சங்கத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர் திரு. ஜே. டி. மோல்ட் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இலங்கை வர்த்தகர் சங்கத் தின் முன்னைநாள் தலைவர் திரு. ரேணர் கிறீன் அரசாங்கத்தின் பொருளாதார, நிதிக்கொள்கை களைக் கண்டித்துக் கூறிய கருத்துக்களுக்கு இக்கடிதம் பதிலாக அமைந்துள்ளது. திரு. மோல் அவர்கள் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தற்காகத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துவிட்டு, அமைச்சர் எழுதுகிறார் :—

" இதே சமயத்தில், தங்கள் சங்கத்தின் இருபத் தொன்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முன்னை நாள் தலைவர் நிகழ்த்திய உரை துரதிர்ஷ்ட விளைவை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவிக் காது இருக்க முடியவில்லை. அவரது உரை இந் நாட்டுப் பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட் டிருந்தது. வெளி நாடுகளிலும் கருத்து வெளி யீட்டிற்கு அது ஒரு விஷயமாக இருந்திருக்கலாம். முன்னைநாள் தலைவரின் உரையினால் ஏற்பட்டிருக் கக்கூடிய தவறான கருத்துக்களைப் போக்குதற்கு அரசாங்கத்தின் சார்பில் இக்கடிதத்தை எழுத முடிவு செய்தேன்.

" தங்களின் முன்னைநாள் தலைவர் சொன்னார்:— அந்நிய செலாவணிப் பிரச்னை சம்பந்தப்பட்டவரை யில், குறித்த பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றுக்குக் கணிசமான வெளிநாட்டு மூலதனம் கொண்டுவர 1960 ஆம் ஆண்டில் தனியார்துறை செய்த முயற்சியை ஏற்றுக் கொண்டிருந்தால், இன்று நிலைமை எவ்வளவு மாறுபட்டதாக இருக் கும் என்பதை எண்ணாமல் இருக்கமுடியவில்லை.

" தொழில் அறிவு, அனுபவம் முதலானவற் றுடன், வெளி நாட்டு மூலதனம் முதலீட்டுத் திட்டங் களுக்குக்கிடைக்கக் கூடியதாக இருந்தது. அவற்றுள் சிலவற்றுக்கு ஏற்றுமதி வாய்ப்புக்களும் இருந்தன. இத்திட்டங்கள் பொதுத்துறைக்கென ஒதுக்கப்பட்டி ருந்தாலோ என்னவோ அவை எதுவும் பரிசீலனை க்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அத்தகைய திட் டங்களைப் பொதுத்துறை மேற்கொண்டால், அவற் றுக்குத் தேவையான பணம் வெளிநாட்டுக் கடன் களாகவே கிடைக்கும். ஆனால் தனியார் துறை யோ சகல சிரமங்களையும் ஏற்று, வெளிநாட்டு மூலதனத்தை அளிப்பதற்குத் தயாராக இருந்தது.

" அரசாங்கம் வேண்டுமென்றே தனியார்துறை கவர்ச்சிகரமான முறையில் மேற்கொள்ளவந்த திட் டங்களைத் தட்டிக் கழித்தது என்பதும், அதற்குக் காரணம், அரசாங்க உரிமை, பொதுத்துறை ஆகியவை சம்பந்தமாக அரசாங்கம் நாட்டம் கொண்டிருந்தது என்பதும் தங்களது முன்னைநாள் தலைவரது உரை யில் உள்ளீடாகத் தொனிக்கின்றன. தனியார்துறை உண்மையாக மேற்கொள்ள முன்வந்ததை நீங்கள் நன்கு பரிசீலனைசெய்தால் மேற்குறிப்பிட்டுள்ளது முற்றும் தவறான கருத்து என்பதை உணர்வீர்கள். 1960 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி இலங்கை வர்த்தகர் சங்கத்தின் அப்போதைய தலைவர் திரு. எஸ். ரி. எல். டி. சொய்சா பிரத மருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பற்றிச் சங்கம் கொண்டிருந்த கருத்தை விளக்கியிருந்தார். பொது நலன் என்ற கட்டுக்கோப்புக்குள் சுயேச்சை யாக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனுமதிக் கப்படுவதுடன், ஊக்கப்படுத்தப்படவும் வேண்டும். இன் றேல், இலங்கை முடிவில் கம்யூனிஸத்துக்குப் பலி யாகிவிடும் என்பதே அவரது கடிதத்தின் சாரம் ".

**திட்டநிரல்**

" அதே தினத்தில் வர்த்தக சங்கத்தின் தூதுக் குழு ஒன்று என்னை வந்து சந்தித்து, நாட்டின் அபிவிருத்தியில் தனியார்துறை முக்கிய பங்குவகிக்க

விரும்புவதாகத் தெரிவித்து, கீழ்க்காணும் திட்ட நிரலைச் சமர்ப்பித்து, அவற்றில் முதலீடு செய்வதற்குத் தனியார்துறை அனுமதிக்கப்படவேண்டும் என்றும், அவற்றுக்கு வேண்டிய மூலதனம் பெரும்பாலும் வெளிநாட்டினதாகவே இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

| | திட்டம் | குழுவினர் | மூலதனம் |
|---|---|---|---|
| 1 | எண்ணெய் சுத்திகரிப்பு | ஷெல் கம்பெனி ஒவ் சிலோன் லிமிடெட், கல்ரெக்ஸ் சிலோன் லிமிடெட், ஸ்ரான்வாக் ஒயில் கம்பனி பி. பி. | 20 கோடி ரூபா |
| 2 | ரயர் தொழிற்சாலை | ஜெனரல் ரயர் கம்பனி சி. டபிள்யு. மக்கீ அன்ட் கோ. லிமிட் | 1 கோடி 50 லட்சம் ரூபா |
| 3 | சிமெந்துத் தொழிற்சாலை | யு. எஸ். குழுவினர் | 5 கோடி |
| 4 | வர்ணப்பூச்சு | அமெரிக்கா இலங்கை கூட்டு முயற்சி | |
| 5 | கொழும்பு வடக்கு நில மீட்சி | அமெரிக்க குழுவினர் | |
| 6 | மருந்து வகைகள் | உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அமெரிக்கக் குழு ஆலோசகராக இருத்தல் | |
| 7 | பைசிக்கிள்கள் | பிரிட்டிஷ் கூட்டு முயற்சி | |
| 8 | வானொலிப் பெட்டிகளை ஒன்று சேர்த்தல் | அமெரிக்க கூட்டு முயற்சி | |
| 9 | மோட்டார் கார்களை ஒன்று சேர்த்தல் | | |
| 10 | மோட்டார் கார் பட்டறிகள் | பிரிட்டிஷ் கூட்டு முயற்சி | |
| 11 | பிளாஸ்டிக் வீட்டுப் பொருட்கள் | | |
| 12 | பொலிதீன் உறைகள் | பிரிட்டிஷ் கூட்டுமுயற்சி | |
| 13 | குளிர்சாதனப் பெட்டிகளைச் சேர்த்தல் | பிரிட்டிஷ் கூட்டு முயற்சி | |
| 14 | கப்பல் கட்டும் தளம் | மேற்கு ஜெர்மனி கூட்டு முயற்சி | |

"இத்திட்டங்கள், துரிதமாக நிறை வேற்றப்பட்டால், நாட்டிற்கு மதிப்பிடற்கரிய அந்நிய செலாவணி வந்து சேரும் எனவும், வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் எனவும் தூதுகோஷ்டியினர் நிச்சயப்படுத்திக்கூறினர். மேலும், இவற்றைத் தனியார்துறை மேற்கொண்டால், அரசாங்கத்துக்கு நிதிப்பொறுப்பு நீங்குவதுடன், அணைக்கட்டு, நீர்ப்பாசனத்திட்டம் போன்ற அடிப்படை அபிவிருத்திகளை அரசாங்கம் மேற்கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது.

"1960 ம் ஆண்டில் தனியார் துறைக்கென ஒதுக்கப்படவேண்டிய திட்ட நிரலே சுவாரஸ்யமானது. நிரலில் தரப்பட்டவற்றுள் இரண்டைத்தவிர மற்றவை அனைத்தும் அந்நிய மூலதனத்தைக் கொண்டே நிறைவேற்றப்பட வேண்டியவை. மற்றைய இரண்டிலும் பெரிய திட்டமான ரயர் தொழிற்சாலைக்கு ஜெனரல் ரயர் கம்பனியும் சி. டபிள்யு. மக்கீ அன் கம்பனி லிமிட்டெட்டும் மூலதனம் வழங்கும். திரு. எஸ். ரி. எல். டி சொய்சா மக்கீ அன் கம்பனியின் மனேஜிங் டைரக்டர். அவரது சகோதரர் திரு. ரி. சி. ஏ. டி. சொய்சாவும், திரு. ரேணர் கிறீனும் மற்றைய இரு டைரக்டர்களாவர். மற்றொரு விதமாகச் சொன்னால், வெளிநாட்டு மூலதனம் உள்நாட்டு மூலதனத்துடன் சேர்த்து முதலீடு செய்யப்படுவதற்கு வரவில்லை. ஆனால் உள்நாட்டின் ஒரு பிரிவு மூலதனத்துடன் அதாவது 1960 ம் ஆண்டின் தூதுக்குழுத் தலைவரும் அப்போதைய வர்த்தக சங்கத் தலைவருமான திரு. எஸ். ரி. எல். டி சொய்சா, அவரது சகோதரர், திரு. ரேணர் கிறீன் ஆகியோரைப் பிரதி நிதிகளாகக்கொண்ட மூலதனத்துடன் சேர்ந்து அந்நியமூலதனமும் முதலீடாக இருந்தது. இலங்கையின் வெளிநாட்டு ஆஸ்தியைப் பெருக்குதற்கு அந் நபர்கள் கூறிய முறைகளுக்கே இப்பதில் எழுதப்படுகிறது.

### ஜனநாயக நடுவழி

"பொருளாதாரத்தின் மிக முக்கியமான சில துறைகளில் சுயேச்சையாக இயங்கும் கோரிக்கையே 1960 இலங்கை வர்த்தகர் சங்கத் தலைவர் தெரிவித்த யோசனைகளில் அடங்கியிருந்தது என்பது புலப்படும்.

"இதனை அனுமதித்தல் பொது நலனுக்கே குந்தகமாக இருக்கும். நாட்டின் சுதந்திரத்தையும் பொருளாதார ஸ்திரத் தன்மையையும் நிலைநாட்டுதற்கு எந்த வல்லரசுக் கோஷ்டியையும் சார்ந்து நிற்றல் இவ்வரசாங்கத்தின் கொள்கையல்ல. பொருளாதார மீட்சிக்குச் சிரமமானதெனினும் ஜனநாயக ரீதியான நடுவழியைப் பின்பற்றுதலே இவ்வரசாங்கத்தின் கொள்கையாகும்.

"குடியேற்ற ஆதிக்கம் ஒழிந்த பின்னர், அபிவிருத்திக் குறைவான நாடுகளில் பொருளாதார ஆதிக்கம், நாசுக்கான பலகோணத் தன்மையைப் பெற்றுள்ளது. ஆகவே இலங்கையைப் போன்ற நாடுகள் நிரந்தர தேசீய நலனைக் கொடுத்து, தற்காலிக நலனைப் பெற்றுக் கொள்ளாதிருக்க விழிப்பாக இருக்க வேண்டும். 1960 ஆம் ஆண்டில் வர்த்தகர் சங்கம் கோரிய சலுகை வழங்கப்படுவதாயிருந்தால் நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய பிரிவில் தொடர்ச்சியாகப் பல ஏகபோக உரிமைகள் தோன்றியிருக்கும். நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரமும் கேலிக் கூத்தாக முடிந்திருக்கும்.

"ஒரு நாடு பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடைந்தால் மாத்திரம் போதாது. அதன் பொருளாதார அபிவிருத்தி அமைப்புகள் அரசாங்கத்தின் ஜனநாயகக் கொள்கைகளைப் பிரதி பலிப்பனவாகவும் இருத்தல் வேண்டும். பொருளாதார வளத்தை வெளிநாட்டுக் கும்பல்களுக்கு ஈடு வைத்து விட்டு, அரசியல் சுதந்திரம் பெற்றிருத்தல் அர்த்தமற்றது. சிந்தித்துத் தேர்ந்து செய்யாத பொருளாதார அபிவிருத்தி இலங்கையை வெளிநாட்டு மூலதனத்திற்குள்ளேயே சிக்க வைக்கும். இலங்கையைப் போன்ற சிறு நாடுகள் சில துன்பகரமான அனுபவத்தைப் பெற்றுள்ளன. அத்தகைய பொருளாதார சலுகைகள் எங்களின் தற்போதைய பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் பார்க்கப் பாரிய புதுப் பிரச்னைகளைக் கொண்டுவந்து சேர்க்கும்.

"வாழையடி வாழையாகப் பின்பற்றி வந்த பொருளாதார அமைப்பினுல், தற்போது குறிப்பாக ஆசிய நாடுகளில் ஒருவித சூன்ய நிலை ஏற்படுள்ளது. இதனையே நாங்கள் செம்மைப்படுத்த வேணடும். அதற்கும் ஓரளவு காலம் செல்லும். இந்நிலையில், சீரமைக்கப்பட்ட தனியார் துறைத் தொழில் முயற்சிகளுக்கும் எங்களுக்கும் தகராறு எதுவும் கிடையாது. தனியார் ஏகபோக உரிமைகள் தோன்றுவதையே நாங்கள் முற்றுக எதிர்க்கிறேம். ஏகபோக உரிமைகொண்ட தொழில்களில் வெளிநாட்டு மூலதனம் உள்நாட்டு மூலதனத்துடன் கூட்டாகவோ அல்லது தனியாகவோ ஈடுபடுவதற்கு வாய்ப்பளித்தால் இலங்கைக்கு வெளிநாட்டு மூலதனம் வருவதற்கு அது ஒரு தூண்டுகோலாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. கடந்த காலத்தில் ஏற்பட்ட எமது பொருளாதார அபிவிருத்தியின் வரலாற்றில் அத்தகைய கூற்றுக்கு ஆதாரமில்லை. இது இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்துக்குக் குறிப்பாகப் பொருந்தும். தனியார் துறையில் பல சாதனைகளைப் புரிவதற்கு தங்கு தடையற்ற வாய்ப்புக்கள் பல அளிக்கப்பட்டிருந்தன. அத்தகைய வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்தாமைக்கு எந்தவித சாட்டுக்களும் இருக்க முடியாது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறை எவ்வளவுக்கு, என்ன முறையில் பங்கு கொள்ள முடியும் என்பது, திட்டமிட்ட பொருளாதார சூழ்நிலையில் ஏற்படும் சமூக மாறுதல்களுக்கு அவை எப்படி ஈடு கொடுக்கின்றன என்பதைப் பொறுத்தே உள்ளது.

"எல்லாத் திட்டங்களிலும் ஏகபோக உரிமை கொண்டிருப்பது அரசாங்கத்தின் திட்டமல்ல. ஆயினும் தனியார்துறை பொருளாதாரத் துறையில் அதன் கடமையை நிறைவேற்றும் எனக் காத்துக் கொண்டிருப்பதற்கில்லை. அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க தனியார்துறை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் உத்தேசம் இருந்தால், அதற்கு அரசாங்கம் சகல ஆதரவும் அளிக்கும். ஆனுல் அத்தகையை வேலைகள் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடந்தேற வேண்டும்.

**பொறுமை வேண்டும்**

"இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களும் வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைக் கட்டுப் பாத்திரங்களும் பெறுவதில் ஏற்படும் சிரமங்களைப் பற்றி முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இன்னும் சற்றுப் பொறுமையாக இருந்து விஷயங்களைப் புரிந்து கொள்ளுதல் நல்லது. பெருந்தொகை சம்பந்தப்பட்ட நாணயக் கட்டுப்பாட்டு விண்ணப்பங்கள் கவனமாகவே பரிசீலனை செய்யப்படவேண்டும்.

"நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தினுல், வெளிநாட்டு மூலதனம் வந்து சேரும் என்ற கூற்றை நம்பி 1951 ஆம் ஆண்டில் இருந்த அரசாங்கம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. அவ்வாறு தளர்த்தியதும், நாட்டிலிருந்து பணம்பறந்து விட்டதே உண்மையாக நடந்த நிகழ்ச்சியாகும். அவற்றின் இடத்துக்கு வெளிநாட்டு மூலதனம் குறிப்பிடத்தக்க அளவுக்கு வந்துசேரவில்லை. பத்து வருட காலத்துக்குள் இரண்டாவது முறையும் அத்தகைய ஒரு கண்துடைப்பு எங்களுக்கு ஏற்பட அனுமதிக்க முடியாது".

# உலர் வலய வெற்றிலைச் செய்கை

உலர்வலயத்திலே யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வலிகாமம் வடக்கு, மேற்குப் பிரிவுகளில் காணப்படும் செந்நிறமும் கபில நிறமும் பொருந்திய இருவாட்டித் தரைகளிற் பெரும்பான்மையாகச் சிறப்பாகவும் மன்னுர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள நரைநிறம பொருந்திய இருவாட்டித் தரைகளில் ஓர் அளவுக்கு அலட்சியமாகவும் வெற்றிலைக் கொடி உண்டு பண்ணப்படுகின்றது.

## நிலம் பண்படுத்தல்

வெற்றிலைக் கொழுந்து நாட்ட 2—3 மாதங்கட்கு முன்னர் நிலம் பண்படுத்தப்படுதல் வேண்டும்.

(1) நிலத்தின் மேற்பரப்பில் 6—12 அங்குலப் படையாகச் சுள்ளித்தடி, தண்டு, கூளப் பொருள்களைப் பரப்பியெரித்துக் கிருமியை அழித்துக் கொள்க.

(2) மண்செம்மையாகப் பண்படும் வரை உழுது இடப்புடைத்து மறுவுழவு நடாத்துக.

(3) வழமையான இறைப்பு முறைக்கேற்ப பாத்திகள் கட்டிக் கொள்க.

(4) பாத்தி நீர்ப்பாய்ச்சலுக்கு 2—4 அடியகலமும் தொழில் வசதிக்கேற்ற நீளமுள்ள தாழ்ந்த பாத்திகளைக் கட்டிக் கொள்ளலாம். எனினும் இரண்டு அடி அகலமும் ஓர் அளவுக்கு உயர்ந்ததுமான மேடைகள் இடையே, நீர்க்கால்கள் உடையனவாய் அமைத்துக் கொள்ளுதல் சிறந்த முறையாகும். நீர்க்கால்கள் மூலம் நீர் பாய்ச்சுதலால் நீர் மிச்சமாகும். பாத்திகளில் நீர் கட்டுதல் ஓர் அளவுக்கு நீரை வீணுக்குவதாகும்.

## வெற்றிலைக் கொடிக்குக் கொழுகொம்பு

முள்முருக்கு அல்லது கலியாண முருக்கு (எரித்திரிஞ இண்டிக்கா) பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது வெற்றிலைக் கொடியின் வளர்ச்சிக் காலம் பூராகவும் உயிர்க்கொழுகொம்பாகப் பயன்படுகின்றது. இதன் இலைகளும் இளங்கிளைகளும் மாடாட்டுக்குச் சிறந்த உணவாகும்.

(1) பாத்திகள் கட்டிய பின்னர் முருக்கந் தண்டுகள் (6—8 அடிகள் நீளம், 4—6 அங்குலங்கள் சுற்று) நாட்டப்படுகின்றன.

(2) பாத்தியின் நீளப்பாட்டு வரம்பிலே ஒவ்வொரு அடி இடைவெளிவிட்டு அவற்றை நாட்டுக. ஒரே முறையில் நடுகையை முடிப்பதற்குப் போதிய தண்டுகள் இல்லாவிடத்து ஒன்றுவிட்டொன்றுநாட்டி வெற்றிலைக்கொழுந்து நட்டு $1\frac{1}{2}$ மாத அளவில் வெற்றிடங்களை நிரப்பலாம்.

(3) முருக்கந்தடிகளில் முளை கிளம்பச் செய்ய ஓர் அளவுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொள்க.

## கொழுந்து நடுகை

கொழுந்து மூலம் வெற்றிலைக் கொடி உண்டு பண்ணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 3 கணுக்களும் மூன்று வெற்றிலைகளுமுள்ள வெற்றிலைக் கொடித்துண்டம் இதற்குப் பயன்டுகின்றது. வயதில் 3 ஆண்டுகட்கு மேற்படாத தாய்க்கொடியிலிருந்து கொழுந்து வெட்டப்படுகின்றது. போதிய கொழுந்துகளைத் தாய்க்கொடிகளிலிருந்து பெற்றுக் கொள்ளவியலாதவிடத்து, மொழிவேருள்ள முதலாம் கிளைகளிலிருந்து கொழுந்து எடுத்துக் கொள்ளலாம். முந்திய கத்தரிப்பு மட்டத்திலிருந்து 2—3 வெற்றிலைகளை விட்டுத் தாய்க்கொடியையும், தாய்க்கொடியிலிருந்து 1—2 அங்குலங்கள் விட்டு முதலான கிளையையும் வெட்டிக் கொள்க. வெட்டிய கொடிகளை மூவிலைத் துண்டங்களாக வெட்டுக.

தண்டிலிருந்து கீழ் இலையைக் கால் அங்குல இலைக்காம்பு விட்டுக் கொய்து மத்திய இலையை நிமிர்த்திப் பிடித்து, ஈரமுலர்வதைத் தடுத்தற் பொருட்டு மேலிலையைப் புரட்டிமடித்துச் சுற்றி மென்மையான பனைச்சார்க்கீற்றினுல் கட்டுக.

(1) ஒவ்வொரு முருக்க மரத்திலும் இவ்விரண்டு கொடிகள் தாவிப்படரக் கூடியதாக நிலத்திற் பொளியடித்துக் கொழுந்தை அதன் நடுக்கணுவரை நேராகப்பதித்துப் பொளியை மண்ணுல் மூடுக.

(2) நட்ட கொழுந்துக்கு நிழலிடுக.

மழைக் காலத்தில் கொழுந்தை நேரடியாகத் தோட்டத்திலே நாட்டலாம். எனினும் நோய் அதிகஞ் சம்பவிப்பது இயல்பு. பதிவைத்து முளை கிளம்பச் செய்த கொழுந்துகள் மிகவிரைவில் நிலையுறுமாகையால் அங்ஙனஞ் செய்யப்பட்ட கொழுந்துகளை நாட்டுதல் உத்தமம். கொழுந்துகளைத் துணியால் மூடப்பட்டதும் தென்னம்பொச்சுத் தூளுந் தும்பும் உள்ளதுமான இனம் பெருக்கற் கருவியில் பதிவைத்து தினந்தோறும் இருவேளைகளில் நீர் ஊற்றி ஈரப்பதனை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

### வெற்றிலைக் கொடியைப் பராமரித்தல்

**வெற்றிடங்கள்.**—நட்டு இருவாரங்கட்குப்பின்னர் வெற்றிடங்களை நிரப்புக.

**கொழுந்தைப் பலப்படுத்தல்.**—நட்டு 3 வாரங்கட்குப் பின்னர் சுருளை அவிழ்த்து 3—4 நாட்களுக்குக் கொழுந்தைத் திறந்து வைத்துக் கொள்க.

**கொடியை மேல் நோக்கி வளரச் செய்தல்.**—நட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர், முளையை காய்ந்த கம்புகள் துணையாக மேல் நோக்கி வளரச் செய்க. கொடிகள் 2 அடிகட்கு வளர்ந்தவுடன் அவற்றை முருக்க மரங்களில் மென்மையான பனையோலை அல்லது தென்னோலைக் கீற்றினால் கட்டுக.

முதலில் ஒவ்வொரு கொழுந்திலிருந்தும் நடுக் கணுக் கண்ணிலிருந்தும் மேல் கணுக் கண்ணிலிருந்துங் கிளம்பும் இரு அங்குரங்களையும் வளரவிடுக. சில நாட்களுக்குப் பின்னர் பலங்குறைந்த அங்குரத்தையகற்றுக.

முருக்க மரங்களில் பனஞ்சலாகை அல்லது கமுகஞ்சலாகைகளை ($1\frac{1}{2}$ அங்குல அகலம்) மரங்களின் குறுக்கே வைத்துக் கட்டுதலால் வெற்றிலைக் கொடிகள் சுலபமாகப் பரந்து படரும்.

**நீர்ப்பாய்ச்சல்.** முதற்பன்னிரண்டு நாட்களிலும் தினந்தோறும் நீர்ப்பாய்ச்சிப் பின்னர் ஒன்று விட்டொரு நாட் பாய்ச்சிக் கொள்க. களைகட்டல், சருகு பொறுக்கல், பாத்தி மண்ணைப்பண்படுத்தல், பாத்தி கட்டல் முதலியனவும் கவனித்தற்பாலன.

**எருப்பெய்தல்.**—ஆண்டு தோறும் ஓர் ஏக்கருக்கு 15—20 வண்டி எரு விகிதம், நன்கு உக்கியதும் பொடியாக்கப்பட்டதுமான எருப்பெய்து கொள்க.

யாழ்ப்பாணத்தில் மேற்படி அளவின எரு மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு கொழுந்து நட்டு 6, 10, 15 மாதங்களில் முறையே பயன்படுத்தப் படுகின்றது.

மீண்டும் மேற்படிமுறையில் அங்கே எருப்பெய்தல் வழக்கமாகும். தேவையானபோது, வெற்றிலைக் கொடியை இறக்கி, அடிப்பாகத்தைச் சுற்றி மண்ணைக்கிண்டிக் குழியில் எருப்போட்டு அதில் சுருளைப் பதிப்பதுமுண்டு.

**கத்தரித்தல்.**—(1) கொழுந்து நட்டு 2 மாதங்கட்குப் பின்னர் தாய்க்கொடி 3 இலைகளுடன் நிற்க விட்டுக் கத்தரிக்கப்படுகின்றது. நுனிக் கணுக் கண்ணிலிருந்து கிளம்பும் முளை வளரவிடப்படும்.

(2) இரு மாதங்கட்குப் பின்னர் புதுக்கொடி 3 இலைகளுடன் நிற்கவிட்டுக் கத்தரிக்கப்படும்.

(3) மேல் முளையை மட்டும் வளரவிட்டு இரு மாதங்கட்குப் பின்னர் மேற்படி முறையில் கத்தரித்துக் கொள்க.

(4) மேற்கண்ட முறையில் மத்திய கொடிஇரண்டு மாதங்கட்கொரு முறை கத்தரிக்கப்படுகின்றது. மூன்றும் முறை கத்தரித்த பின்னர் அடியிலிருந்து ஐந்தாம் இலைக்கு மேற் கணுக்களிற் கிளம்பும் முளைகளும் வளரவிடப்படுகின்றன.

(5) இடை முளைகள் ஐந்து இலைகள் விடப்பட்டுக் கத்தரிக்கப்படுகின்றன.

(6) மூலக்கொடி 6—10 அடிகட்டு வளர்ந்த பின்னர் மூன்றும் படையான கிளைகள் வளரவிடப் படுகின்றன.

### வெற்றிலை ஆய்தலும் கட்டுதலும்

தாய்க்கொடியின் இலைகளும் இடைமுளைகளின் இலைகளும் "சாய்ப்பு" என்று அழைக்கப்படுகின்றன. மூன்றும் படியான கிளைகளில் கண்ணிகள் தோன்றி அவற்றிலிருந்து "மாற்று" வெற்றிலைகள் உண்டாகின்றன. "சாய்ப்பு" வெற்றிலைகள் பொதுவாகப் பெரியன. கூடுதலாகக் கறுத்திருக்கும், அவற்றின் காம்புகளின் இரு அலகுகளும் வேறுபட்டதன்மையிற் காணப்படும். "மாற்று" வெற்றிலைகள் "சாய்ப்பு" வெற்றிலைகளினும் மக்களால் விரும்பப்படுகின்றன.

(1) இடை முளைகளிலிருந்து முதலாம் ஆண்டு "சாய்ப்பு" வெற்றிலைகளைப் பறித்துக்கொள்ளலாம்.

(2) வெற்றிலைக் கொடிகள் ஓராண்டுப் பருவமெய்திய பின்னர் "மாற்று" வெற்றிலைகள் ஆயலாம்.

பொதுவாக ஒரு மாதத்தில் இரண்டொரு தடவை வெற்றிலை ஆயப்படுகின்றது. மாற்றுக் கண்ணியில் நுணியில் இரு இளம் வெற்றிலைகளை விட்டுக் கீழுள்ள இலைகளைப் பறித்துக் கொள்க. இலைக்

காம்பில் 1/5 அங்குலம் விட்டு நகத்தினுல் நுள்ளி இலகளை ஆய்ந்து கொள்ளலாம்.

(1) மூன்றும் ஆண்டுக்குப் பின்னர் "மாற்று" வெற்றிலையையும் "சாய்ப்பு" வெற்றிலையையும் ஆய்ந்து கலந்து "அடுவலாக" விற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் வடக்குப் பிரிவில் பொதுவாக நான்குதர வெற்றிலைகள் முறையே "சாய்ப்பு", "மாற்று", "அடுவல்", "கழிப்பு" விலைப் படுகின்றன. சிற்றிலைகளும் கசங்கிய, ஒடிந்த இலைகளும் நோய்ப்பட்ட இலைகளும் "கழிப்பு" வகுப்பிற் சேருகின்றன.

வலிகாமம் மேற்குப் பிரிவில் "மாற்று", "சாய்ப்பு" என்னும் இருதர வெற்றிலைகள் விலைப் படுகின்றன. மன்னூர்ப் பிரிவில் "மாற்று", வெற்றிலையும், மட்டக்களப்புப் பிரிவில் "பகழி", "கட்டு", "தூக்கட்டு" என்னுந் தரவெற்றிலைகளும் விலைப்படுகின்றன.

### நோய்கள்

பொதுவாக, இலைப்புள்ளி, கருந்தடி, பூஞ்சணம் ஆகிய நோய்களும் வட்டப்புழுவால் வேருக்குச் சேதமும் உண்டாகின்றன.

நோய்ப்பட்ட எல்லா வெற்றிலைகளும் கொடிகளின் துண்டங்களும் எரித்து அழிக்கப்படவேண்டியன.

(1) போடோக் கலவை அல்லது 10 கலன்நீருக்கு 4 அவுன்சு விகிதம் குப்பிரவிற்றுப்போன்ற செம்பு பங்கசு கொல்லியொன்று சேர்ந்த கலவை விசிறப்படுதலால் இலைப்புள்ளி நோய் பரவாது தடுக்கப்படும். பூஞ்சண அல்லது பழுப்பு நோயை 2 கலன் நீருக்கு 1 அவுன்சு செம்பு பங்கசு கொல்லி விகிதஞ் சேர்ந்த கலவையை விசிறித் தடுத்துக் கொள்க.

கருந்தடி சம்பவிக்கும்போது நோய்ப்பட்ட கொடியையகற்றி அது வளர்ந்த இடத்தை, ஒரு கலன் நீருக்கு 1 அவுன்சு யேயின்பாய் பொருள் விகிதங் கரைத்து ஒரு சதுர யார் நிலத்திற்கு ஒரு கலன் கரைசல் விகிதம் ஊற்றி, தொற்று நீக்குக.

வட்டப்புழுவைக் கொல்ல நிலத்தூமமாக்கி ஒன்றினைப் பிரயோகித்துக் கொள்க.

நோய் காணப்பட்டவுடன் மருந்து விசிறல் வேண்டும். நோய் சாதாரணமாகச் சம்பவிக்கும் இடங்களில் தடுப்பு முறையாகப் பரிகாரத்தை அனுசரித்தல் விரும்பத்தக்கது.

**கமத்தொழில் விளக்கம்**

## சோஷலிஸ் இலங்கை......

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

நான் ஏற்கெனவே கூறியதைப் போல், இந்த மே தினத்தில் தான் தொழிலாளர்கள் தமது இயக்கத்தின் ஐக்கியத்தையும், சக்தியையும் வெளிப்படுத்துவது வழக்கமாகும். எனவே, நீங்கள் ஒவ்வொருவரும், இந்நாட்டின் திட்ட மிடப்பட்ட அபிவிருத்திக்கு உங்கள் பங்கை அளிக்க இன்றே திடசங்கற்பஞ் செய்ய வேண்டும்.

சிலதொழிற்சங்கத் தலைவர்கள் சோஷலிஸத்தை உருவாக்குவதைக்காட்டிலும் வரி விதிக்கப்படுவதையிட்டு அதிக கவலைப்படுகிருர்கள் அவர்கள் தங்கள் நலன்களுக்காக தொழிற்சங்கங்களை உபயோகிக்க முயலுகிருர்கள். சுயநலமுள்ள அரசியல் வாதிகள் தொழிலாளர்களைத் தவருன பாதையில் இட்டுச் செல்ல முடியாதென நான் திடமாக நம்புகிறேன்.

சோஷலிஸ இலங்கையை உருவாக்க நாம் எடுக்கும் முயற்சிக்கு உங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று தொழிலாளர் வகுப்பினரை நான் வேண்டிக் கொள்கிறேன். சொந்த நன்மைகளுக்காகவோ, நீங்கள் செய்யும் மேலதிகமான சொற்ப வேலைகளுக்கு மேலும் கோரிக்கைகளை விடுப்பதற்காகவோ அன்றி, தற்போதைய நெருக்கடியான நிலையினின்றும் எமது நாட்டை விடுவிக்கும் நோக்கத்துடன் உங்கள் உதவி அளிக்கப்பட வேண்டும். எங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் நமக்கு வெற்றியளித்தால், அந்த வெற்றி இந் நாட்டின் முற்போக்குச் சக்திகளுக்கு குறிப்பாக தொழிலாளர் வகுப்பினருக்கு அதிக வல்லமையை அளிக்கும் என்பதை நான் மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த மே தினத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்களுக்கும் குறிப்பாக சகல தொழிலாளர் வகுப்பினருக்கும் நான் ஓர் விசேட வேண்டுகோள் விடுக்கிறேன். அதாவது நீங்கள் எந்தத் தொழிலில் இருந்தாலும் நீங்கள் அதில் அக்கறையும், ஊக்கமுங் கொண்டு உழைக்க வேண்டும். அங்ஙனம் செய்வதால் பொதுமக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் நிறைவேற்றவும், செழிப்பும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு புதிய நற்காலத்தை அவர்களுக்காகத் தோற்றுவிக்கவும் நீங்கள் மாபெரும் உதவியைச் செய்தவர்களாவீர்கள்".

# ஹஸ்திசைலபுரம் குருநாக்கலானமை

வெள்ளவத்தை திரு. மு இராமலிங்கம்

"ஹஸ்திசைலபுரம்" என்னுஞ் சொல் ஹஸ்தி—ஆனையையும், சைலம்—கல்லையுங் குறித்து ஆனை வடிவமுள்ள மலையிருக்கும் பட்டினமெனப் பொருள்கொடுக்கும். பொல்காவலையிலிருந்து குருநாக்கலுக்குப் போகுந் தெருவிலிருந்து இவ்யானை வடிவமுள்ள மலையையும் அதன் தும்பிக்கை வடிவத்தின் கீழ் இனனொரு சிறிய மலையையுங் காணலாம். இம்மலைகளைப் பற்றிய ஐதீகமானது நீர்வரண்ட காலத்தில் யானையொன்றும் அதன் பின் வேறு மிருகங்களும் குருநாக்கலுக்குக் கிட்டவிருக்கும் "**வெனறுவெவ**" வென்னுங் குளத்துக்குத் தண்ணீர் குடிக்கப்போகையில் அக்குளத்தருகேயிருந்த ஔவையைப் போன்ற கிழப்பெண் ஓர் உப்புக்கட்டியை அந்த யானைக்கும் தன் வீட்டிற்குமிடையில் வைத்தபடியால் அந்தயானை அவ்வுப்புக் கட்டியை நக்க அவ்விடத்திற்றனே அந்த யானையும் அதனுடன் வந்த மறு மிருகங்களும் கல்மலைகளாகச் சபிக்கப்பட்டனவென்பதே. உப்புக்கட்டியே அவ்யானை மலைக்கு முன்னிருக்கும் சிறு மலை. இவ்யானை மலையையே அத்தாகலமென்பர்.

குருநாக்கல் என்னுமிடத்தில் அத்தாகல என்னும் மலையின் பின் குறுமினியாகல (வண்டுவடிவமுளள மலை) ஆண்டாங்கல (விரால் வடிவமுள்ள மலை) அத்தினிகல (பெண்யானை வடிவமுள்ள மலை) எலுவாகல (ஆட்டுவடிவமுள்ள மலை) என்னும் மலைகள் ஒருங்கேயுள. குறுமினியாகல என்னும் மலையின் பெயரிலிருந்தே குருநாக்கல் என்னும் பெயர் உண்டாயது.

யாழ்ப்பாணத்திலிருந்தரசாண்ட சிங்கையாரிய வரசர்களின் ஆதிக்கத்துக்காற்றமல் சிங்களவரசர், தம்பதெனியா, யாப்பாகு, குருநாக்கல் முதலிய விடங்களில் தங்கள் இராசதானியை ஒன்றுக்குப் பின் ஒன்றாக மாற்றி வந்தார்கள். அவ்விடங்களையும் யாழ்ப்பாண வரசன் தாக்க அவ்விடங்களை விட்டுக் கம்பளைக்கும் கண்டிக்கும் முறையே ஓடினார்கள்.

குருநாக்கலை இராசதானியாக்கி யரசாண்ட காலத்தில் சிங்களவரசனொருவன் ஓர் முஸ்லீம் பெண்ணை வதுவை செய்து ஒரு மகன் பிறந்தானென்றும் இம் முஸ்லீம் இளவரசன் அவ்வரசனின் சிங்களப் பட்டத்துத் தேவியின் மகனை நாட்டினின்றும் துரத்திவிட்டு அரசுரிமையைக் கைப்பற்றினனென்றும் அவனதுசிங்கள மந்திரிமார்களின் சூழ்ச்சியால் இந்த யானை மலையின்மேல் இயற்றுவிக்கப்பெற்ற யந்திரப் பொறியாசனமொன்றில் ஏற்றப்பெற்று அதனால் எறிபட்டுக்கொலையுண்டானென்றும் அவன் கொல்லப்பட்டபின் பட்டத்து யானையை அரசகுமாரனைத் தேடிப்பிடித்துவரும்படி ஏவ, அவ்யானை **கழுந்தாவ** என்னுங் கிராமத்தில் ஒரு கமக்காரனின் இல்லத்தில் வளர்ந்து, அக்கமக்காரனின் மூத்த புத்திரி **கழு எத்தனு** என்பவள் விவாகஞ் செய்ய மறுக்க இளைய புத்திரி **சிறிமல் எத்தனுவால்** உவந்தேற்று மணமுடிக்கப்பெற்றிருந்த இராசகுமாரனைப் பிடித்துவரச் சென்றதென்றும், அந்நேரத்தில் அவன் வயலில் வேலை செய்தானென்றும், அவன் மனைவி அவன் உண்ணப் பழைய சாதங்கொண்டு சென்றாளென்றும், யானையைக் கண்ட இளவரசன் முஸ்லீம் அரசன் தன்னைப் பிடிக்க வருகிறானெனப் பயந்தோடிப் பக்கலிலுள்ள ஓர் மலைக்குகையினுள் ஒளித்தானென்றும், அந்த யானை குகையின் அருகில் சென்று தும்பிக்கையை உள்ளுக்குச் செலுத்தியும் பிடிக்க முடியாததால் தும்பிக்கையை மேலும் நீட்டத் தனது தந்தங்கள் தடுப்பதையுணர்ந்து மலையில் இரு துளைகள் தந்தங்களாற் றுளைத்து அத்துளைகள் வழியே தம் தந்தங்கள் செல்லத் தும்பிக்கையை மேலும் நீட்டி இளவரசனைப் பிடித்துவந்து அரசனுக்கியதென்பதும் சரித்திரம். அத்தாகலவெனச் சிங்களரால் அழைக்கப்படும் ஆனைவடிவமுள்ள மலையின் பக்கலில் அம் முஸ்லிம் இளவரசன் விழுந்து உயிர் துறந்த விடம் இப்பொழுதும் முஸலீங்களால் வணங்கப்படுகிறது. கழுந்தாவ என்னுமிடத்திலுள்ள மலையிலே ஒரு குகையும் இரு துளைகளும் இப்பொழுதுமிருக்கின்றன. இத்துளைகள் பட்டத்து யானையின் தந்தங்களாற் றுளைக்கப்பட்டனவெனக் கூறுவர்.

ஈழமண்டலப் புலவர் வரலாற்றைப் பற்றி முதியோரிடத்திலும், கற்றோரிடத்திலும் விசாரித்து வருகையில் பின்வருஞ் செய்யுட்களை **எவ். சுபவாக்கியம் பிள்ளைப்புலவர் 1892** ல் குருநாக்கலில் கத்தோலிக்க பள்ளிக்கூட ஆசிரியராயிருந்த காலத்தில்பாடியதாக

(18ம் பக்கம் பார்க்க)

# கப்பித்தாவத்தை விநாயகர் கோயில்

(" நடா ")

ஒரு சிறு வாவி. அதன் மத்தியிலே மிகச்சிறிய அழகிய தீவொன்று காணப்படுகிறது. சிறிய தீவென்று சொன்னால் சுமார் ஆறு அல்லது ஏழு ஏக்கர் நிலப்பரப்பு அளவுள்ள சிறு தீவு. அங்கே பச்சைப் பசேலென்ன தென்னஞ்சோலே தான் தூரத்துப் பார்வைக்குத் தென்படுகிறது. உள்ளே சென்றால் தென்னஞ்சோலைகளுக்கு மத்தியிலே சிறு சிறு குடிசைகளைக் காண்கிறோம். பாலைப்பொழியும் பசுக்கள் ஏராளமாகத் தம்மிஷ்டப்படி சுற்றித்திரிகின்றன. பசும்புல்வெளிகளுக்கு மத்தியில் சிறுசிறு முட்புதர்களும் காட்சிதருகின்றன. அதோ சில முட்புதர்களுக்கு மத்தியில் பாழடைந்த கட்டடமொன்று தென்படுகிறது. அதைப்பார்க்கச் செல்கிறோம். வழியோரமுள்ள ஒரு புதரிலிருந்து இன்னொரு புதருக்குக் கீரிப்பிள்ளையொன்று மின்வெட்டு நேரத்தில் தாவிச்செல்கிறது. அந்தப் பாழடைந்த சிறு கட்டடத்தில் விக்கினத்தைத் தீர்க்கும் விக்கினேஸ்வரர் விக்கிரகம் ஒன்று காணப்படுகிறது. பிரமச்சாரியான விக்கினேஸ்வரருக்கு ஆடம்பரமெதற்கு? அங்கே அமைதியாகக் குடியிருக்கிறார். தலையில் மூன்று தரம் குட்டி, விநாயகரைக் கும்பிடுகிறோம். தீவை மேலும் நமது கண்கள் நோட்டமிடுகின்றன. சுற்றிவரவுள்ள குளத்திற் பலர் நீராடிக்கொண்டிருக்கிறார்கள். விநாயகரை வழிபடுவதற்கு முன்னேற்பாடாகத்தான். சிலர் நீராடிவிட்டு அனுட்டானம் பார்க்கிறார்கள். கூலியாக இரண்டு சதம் கொடுத்துத் தோணிகளில் அக்கரையிலிருந்து விநாயகராலயத்தைநோக்கிப் பலர் வந்துகொண்டிருக்கிறதும் தெரிகிறது.

### மாயக்கதையல்ல

மாயக்கதைகளிலே வரும் தீவொன்றைப் பற்றி இங்கு நான் வர்ணிக்கவில்லை. இலங்கையில் அதுவும் தலைநகரில் இருந்த—இன்றும் இருக்கின்ற ஒரு இடத்தைப் பற்றியே இங்கு கூறுகின்றேன். மருதானை கப்பிதாவத்தையிலிருக்கின்ற விநாயகர் ஆலயம் இற்றைக்குச் சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் நான் வருணித்த சூழலிலே இருந்திருக்கின்றது. நாற்புறமும் வாவியாற் சூழப்பட்டிருந்த இந்த விநாயகராலயமே கொழும்பிலுள்ள அதி ஆதியான இந்துக்கள் வழிபாட்டு நிலையமெனக் கருதப்படுகிறது. இந்த ஆலயத்துக்கு அன்று கொழும்புவாழ் நகர வைதீக இந்துக்குடிமக்களனை வரும் தமது விரத அனுட்டானங்களின் பொருட்டுத் தோணிகளில் வந்துபோவார்களாம். புறக்கோட்டையில் அன்று வணிகர்களாகவிருந்த தமிழ் மக்களும் இக்கோவிலுக்கே விரத அனுட்டானங்களின் பொருட்டு வருவதுண்டாம். குறிப்பாக ஆடி அமாவாசை போன்ற முக்கிய தினங்களில் குளத்தில் நீராடவும் கோவில் தரிசனம் செய்யவும், விரதமனுட்டிக்கவும் ஏராளமானோர் இங்கு வரும் வழக்கமும் அன்று இருந்திருக்கிறது.

### அந்நியர் அட்டகாசம்

இன்று கூடப் பலரால் தீவுக் கோவிலென்றே அழைக்கப்படும் இக்கோவிலின் ஆரம்பகால மெதுவெனத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. அந்நியரின் அட்டகாசங்களுக்குக்கூட இவ்வாலயம் கொழும்பில் அதுவும் துறைமுகத்திற்கு அருகாமையில் தப்பிப் பிழைத்ததென்றால், அது இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமானது பெருமையென்றே கூறவேண்டும்.

### குளம் நிரவப்பட்டது

இன்றுள்ள கொழும்பு மக்கலம்வீதி 1911 ஆம் ஆண்டளவிலேயே அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இன்றைய மக்கலம் வீதியின் ஒரு பகுதியும் புகையிரத இலாகாவின் தற்போதைய இந்திய பண்டசாலைப் பகுதியும் அன்று இக்கோவிலைச் சுற்றியிருந்த குளத்தின் சில பகுதிகளே. குளமும் படிப்படியாக நிரவப்பட்டு இன்றைய அமைப்பைக் கப்பித்தாவத்தைக்கோவிற் சுற்றுடல் பெறுமுன் தற்போதைய காமினிப் படமாளிகைக்குப் பின்னால் இருந்த பாதை யொன்று நேரே இன்றைய தொழில் நுட்பக் கல்லூரிப்பக்கமாகச் சென்றதாகத் தெரிகிறது. அன்றைய கொழும்பிற்கும் இன்றைய கொழும்பிற்கும் தான் எவ்வளவு வித்தியாசம். கப்பித்தாவத்தையின் சரித்திர மூலம் கொழும்பின் சரித்திரத்தையும், ஓரளவு அறிய முடியும். இன்று கப்பித்தாவத்தைக்குச் செல்பவர்கள், அன்று குளமத்தியிலிருந்த சிறு தீவொன்றின் கோவிலா இதுவென்றே நம்ப மாட்டார்கள்.

அன்றைய சேறும் சகதியுமான குளமே கரைசீமெந்திறுற் கட்டப்பட்ட இன்றைய பேரையாறு. துறைமுக பண்ட ஏற்றுமதி இறக்குமதிக்குச் சௌகரியமாகச் செய்யப்பட்ட மாற்றங்கள், பண்டைய குளத்தை முற்றாக உருக்குலேத்துவிட்டனவென்றே கூறவேண்டும். ஏன், குளத்தை நிரவிக்கட்டப்பட்ட பிரமாண்டமான மாளிகைதானே இன்றைய தினகரன் பத்திரிகாலயம் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### சிவன் பூதப்பர்

மாசி மாதம் முதலாம் தேதி 1817 ம் ஆண்டு சிவன் பூதப்பர் என்ற பெருமகன் சுமார் ஐந்தரை ஏக்கர் காணியை இக்கோவிலுக்குத் தருமசாதனம் செய்த உறுதிகூட இன்றுள்ளது. இவரது தருமசாதன உறுதிப்படி கோவிற் சொத்துக்களை எவரும் விற்கவோ ஈடு வைக்கவோ முடியாது. சொத்து மூலம் கிடைக்கக்கூடிய வரும்படி கோவில் பராமரிப்புக்கே செலவிடப்படவேண்டும். உறுதியில் கப்பித்தாவத்தை "கப்டின்ஸ் காடின்ஸ்" என்றே அழைக்கப்படுகிறது. இக்கோயிற் காணிகளுக்கருகாமையில் யாரோ கப்டன் ஒருவரது சிறு நிலப்புலன்களும் அந்தக் காலத்திலிருந்தனவென்றும், அக் கப்டனது தோட்டமெனவே இப்பகுதி அழைக்கப்பட்டதெனவும், பிறிதொரு வரலாறு கூறுகிறது. சிவன் பூதப்பர் ஐந்தரை ஏக்கர் காணியைத் தருமசாதனம் செய்த பொழுது, நரகரி வெங்கடராமையர் என்பவர் கோவிலின் பிரதம குருவாக இருந்திருக்கிறுர். அன்றும் செல்வ விநாயமூர்த்தி கோவிலென்ற பெயருடனேயே இவ்வாலயம் அழைக்கப்பட்டுள்ள விபரம் உறுதியில் காணப்படுகிறது. 1842 ல் ஆறுபேர் கொண்ட முதலாவது தர்மகர்த்தாக்கள் சபையொன்று இக்கோயில் பராமரிப்புக்கென அமைக்கப்பட்டது. இந்தச் சபையைச் சேர்ந்த கடைசித் தர்மகர்த்தா 1900 ஆண்டு வரை இருந்திருக்கிறுர். இதற்கிடையில் நரகரியும் காலமாகிவிட்டார்.

### அரசாங்கம் சுவீகரித்தது

கோவில் நிலப்பரப்பில் சில பகுதிகளை புகையிரத இலாகாவினதும் மக்கலம் வீதியினதும் விஸ்தரிப்புக்கென 1909 இல் தான் அரசாங்கம் சுவீகரித்தது. அப்பொழுது கோவில் பராமரிப்புக்கென தர்மகர்த்தாக்கள் எவரும் இராததால் அரசாங்கம் தான் சுவீகரித்த நிலத்திற்கான நட்ட ஈட்டுப்பணத்தை நீதி ஸ்தலத்தில் கட்டியது. இப்பணத்தைத் தாம் பெற அப்பொழுது இருந்த அர்ச்சகர்களிற் சிலர் விரும்பினர். கோவில் வழிபடுவோர் இதை ஆட்சேபித்தனர். விவகாரம் கோடுவரை சென்றது. 1913 ல் நீதிஸ்தலம் கோவிற் சொத்துக்கள் தருமசாதனச் சொத்துக்கள் என்றும் அவற்றில் எவரும் உரிமை பாராட்ட முடியாதென்றும் தீர்ப்பளித்ததுடன் ஐந்து புதிய தர்மகர்த்தாக்கள் வசம் கோவிற் பரிபாலனத்தையும் ஒப்படைத்தது. நீதி ஸ்தலத் தீர்ப்புப்படி காலத்திற்குக்காலம் தருமகர்த்தாக்கள் தெரிவு செய்யப்பட்டுக் கோவில் நிர்வாகம் செவ்வனே நடைபெற்று வந்தது. 1924 ல் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து தர்மகர்த்தாக்களில் நால்வர் மறைந்துபோக எஞ்சிநின்ற ஒரேஒரு தர்மகர்த்தாவான திரு. சி. விசுவலிங்கம் என்பவர் கோவிலைப் பராமரிக்கும் நிலேயில் தாம் இல்லாதிருப்பதாக 1936 ல் நீதி ஸ்தலத்திற்குத் தெரிவித்து விட்டார். 1924–1929 க்கு இடைப்பட்ட காலத்திலும் தர்மகர்த்தாக்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கோவிற் பரிபாலன விவகாரத்தில் நீதிஸ்தலம்வரை சென்றுள்ளனர்.

### காடையரின் கொட்டம்

1926 ம் ஆண்டளவில் நித்திய மேளத்துடன் சிறப்பாக இயங்கி வந்த இக்கோவில் நிர்வாகம் 1933–1936 க்கு இடைப்பட்ட காலத்தில் பெரிதும் சீர்குலேந்தது. கோயிலும் பாழடைந்தது. கவனிப்பார் எவரும் இல்லே. கோவிற் காணிகளில் பலர் அத்துமீறிக் குடியேறினர். துஷ்டர்களும் திருடர்களும் கோவிற் காணிகளில் குடிபுகுந்ததுடன் தமது கோட்டையாகவும் இந்த இடத்தைப் பாவித்துக்கொண்டனர். இவர்கள் கடைசித் தர்மகர்த்தாவையும் பயமுறுத்தி விரட்டினர். இந்தக்காலத்தில் துஷ்டச் செயல்களுக்கும் கெட்ட நடத்தைகளுக்கும் இருப்பிடமாகக் கப்பித்தாவத்தை தோற்றமளித்தது. பலர் கோவிற் காணிகளிலும் வீடுகளிலும் சொந்தங்கூடப் பாராட்டினர். கோவில் வளவும், சாணமும், சகதியும், சேறும், ஈயும் நிறைந்த ஊத்தைக் காடாகக் காட்சியளித்தது. இந்த அவல நிலேயைக்கண்ட கொழும்புவாழ் இந்துக்களிற் பலர் கண்ணீர் சிந்தினர்.

### உன்னத நிலே

1936 ல் நீதி ஸ்தல உத்தரவுப்படி வழிபடுவோர் கூட்டம் நடைபெற்றது. தரும ஸ்தாபனங்கட்கு வரையாது வழங்கிய வள்ளல் காலஞ்சென்ற திரு. கே. மதியாபரணம் ஐயா அவர்கள், திரு. எஸ். ரி. கனகசபை, திரு. வி. ஏ. கந்தையா (தற்போதைய ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர்) திரு. கே. இராசநாயகம், திரு. கே. தர்மலிங்கம் ஆகியோர் புதிய தர்மகர்த்தாக்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். திரு. ஆ. சின்னத்தம்பி அவர்கள் தர்ம

கர்த்தாக்கள் சபைக் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார். காலஞ்சென்ற திரு. கே. மதியாபரணம் ஐயா அவர்கள் இக்கோவிற் புனருத்தாரணத்திற் செய்த உதவிகள் அளப்பரியவையாகும். அவரது உதவிகளை வாயாற் சொல்லி அடங்கா. பின்பு காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாக்கள் சபைகளில் திருவாளர்கள் க. ஞானசெல்வம் (மட்டக்களப்பு) எஸ். ரி. சின்னத்துரை, எஸ். பொன்னையாபிள்ளை, எச். ஆர். சங்கரப்பிள்ளை, வி. மயில்வாகனம், பொ. சிவானந்தம், கே. கனகசிங்கம், எஸ். சரவணமுத்து, வி. நல்லசேகரம் (காரியதரிசியாக) ஆகியோர் அங்கம் வகித்துள்ளனர். இவர்களது காலத்திலேயே அதாவது 1936 க்குப் பின்னர் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாக்களது காலத்திலே கோவில் இன்றுள்ள அதி உன்னத நிலையை அடைந்தது எனலாம். இத் தர்மகர்த்தாக்களின் இடைவிடாத முயற்சியினால் 1933 ல் ஆண்டளவில் பாழடைந்த கோவில் 1948 ம் ஆண்டிலிருந்து மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 1950 ம் ஆண்டளவில் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 1933-1936 க்கு இடைப்பட்ட காலத்தில் கோவில் வளவில் அத்துமீறிக் குடியேறிச் சொந்தம் பாராட்டிய காடையர்களும் துஷ்டர்களும் படிப்படியாக அகற்றப்பட்டனர். 1951 ல் இந்தச் சுத்திகரிப்பு வேலைகள் பூரணமடைந்தன. இதற்குப்பதினைந்து வருடகாலம் பிடித்தது. கோர்ட்டில் பல வழக்குகளையும் ஆடவேண்டியிருந்தது.

### நிறைகுடம் தழும்புமோ

1936 ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கோவிலின் மிகச் சிரேஷ்ட தர்மகர்த்தாவாக இருந்து வருபவரான திரு. ஆ. சின்னத்தம்பி ஐயா அவர்களுக்கு சைவஉலகம் மிகக் கடமைப்பட்டுள்ளது. தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கமென்றால் என்ன திருகேதீச்சரத் திருப்பணி வேலைகள் என்றால் என்ன இவரது சேவைகளை விபரிக்கத் தனிக் கட்டுரைகள் பல எழுதலாம். இவரது ஊக்கமும் விடா முயற்சியுமே கப்பித்தாவத்தை சீரடையக் காரணமாகும். இதுமிகைப்பட்ட கூற்றல்ல. அத்துமீறிக் குடியேறியவர்கள் விவகாரத்தில் இவரது பணி எங்கும் பலனையே அளித்தது. கோவில் வளவில் மூன்று பெரிய கட்டடங்கள் இவரது முயற்சியால் இவர் பிரதம தர்மகர்த்தாவாக இருக்கும் பொழுது தாபிக்கப்பட்டன. இவற்றின் வரும்படியும் கொண்டு நித்திய மேளத்துடன் ஆறு காலப்பூசையும் நடைபெறுகிறது. எவரது உதவியுமின்றியே கோவிற் கருமங்கள் சிறப்பாக எதிர்காலத்தில் நடைபெற திரு. சின்னத்தம்பி ஐயா அவர்கள் வழி வகைகளைத் தேடிவைத்துள்ளார் என்றே கூறவேண்டும். இப்பணியில் மற்றைய தர்மகர்த்தாக்களின் பணியும் எவரது சேவைக்கும் குறைந்ததல்ல. 1926 ம் ஆண்டிலிருந்து கப்பித்தாவத்தை விநாயகராலய வழிபடுவோர்களில் ஒருவராக இருக்கும் திரு. சின்னத்தம்பி ஐயா அவர்களுக்குக் கொழும்பு மாநகரசபைப் பிரதம இலிகிதர் பதவியை விடுத்து மேலும் பதவியுயர்வுகளை வெளியூர்களில் அளிக்க மேலிடத்தார் விரும்பினர். பூக்கட்டிவைத்துப் பார்த்த பொழுது பிள்ளையார் சம்மதமளிக்க மறுக்கவே இவரும் தனக்கு வந்த பதவி உயர்வுகளை ஏற்க மறுத்துக் கொழும்பிலேயே இருந்து வருகிறார். சுமார் முப்பத்தைந்து வருடகாலப் பொதுசன சேவையில் இதுவரை சுயவிளம்பரத்தைத் தேடிக்கொள்ளாதவர் இவர். அடக்க ஒடுக்கமாக இருந்து பெரிய காரியங்களை எல்லாம் சாதிப்பதில் சமர்த்தர். நிறை குடம் தழும்புமோ ?

### பிரதம குரு

கப்பித்தாவத்தை விநாயகராலயத்தின் பிரதம குருவாகச் ஸ்ரீ. பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் 1939 ம் ஆண்டு முதல் இருந்து வருகின்றார்கள். நல்லூர் தேவஸ்தானத்திலிருந்த ஸ்ரீ. பாலசுப்பிரமணியக் குருக்களின் மகனான இவர் இக்கோவிலுக்கு வரும்பொழுது பிள்ளையாரைப்போலப் பிரம்மச்சாரியாகவே இருந்தார். நல்ல கைராசிக்காரர் இவர். 1939 ம் ஆண்டு ஆறுசதத்திற்கு அருச்சனை வரும்படியில்லாத நேரத்திலும், 1942ல் ஜப்பான்காரர் கொழும்பில் இக்கோவிலுக்கு அருகாமையில் பேரையாற்றையடுத்துக் குண்டு வீசிய போதும் 1958ன் போதும் இவர் பிள்ளையாரை விட்டு அகலவே இல்லை. 1942ல் ஜப்பான்காரர் கொழும்பில் குண்டு வீசியபோது அனேகமாக நகர மக்கள் அனைவருமே இடம்பெயர இவர் பிள்ளையாரைத் தனியே விட்டுவிட்டுப் போகாதது ஆச்சரியந்தான். இக்காலத்தில் கொழும்பிலுள்ள இந்துக் கோவில்களில் பல பூட்டப்பட்டுக் கிடக்கையில் கப்பித்தாவத்தை விநாயகருக்கு விளக்கெரித்தலிலோ அல்லது பூசை முறைகளிலோ தடைகள் எதுவும் ஏற்படவில்லை. இதைச் சொல்லும் போது பிரதம குரு ஸ்ரீ. சண்முகரத்தின சர்மா அவர்கள் கண்கலங்கி அழுது விட்டார். சர்மா அவர்கள் கோவிலில் குடிபுகுந்த சமயத்தில் கோவில் வளவில் அத்துமீறிக் குடியேறி

(19ம் பக்கம் பார்க்க)

இலங்கைச் சரித்திரக் கதைகள்

# மகா பராக்கிரமபாகு

திரு. வை. முத்துக்குமாரசுவாமி

பராக்கிரமபாகு என்பவன் 12 ம் நூற்றுண்டில் இலங்கையில் உள்ள உறுகுணை நாட்டில் வாழ்ந்த இளவரசன். அக்காலத்தில் இலங்கையில் உறுகுணையில் மானுசுலா என்னும் இடத்திலும் தேவிநுவரை என்னும் நகரிலும் பொலனறுவையிலும் பல சிற்றரசர்கள் ஆட்சி செலுத்தி வந்தனர். முதலாம் விஜயபாகு பொலனறுவையில் ஆட்சி செய்து இறந்த பின்னர் அவனுடைய மகன் விக்கிரமவாகு பொலனறுவையில் (1121 தொடக்கம் 1142 வரையும்) அரசு செய்தான். 1 ம் விக்கிரமவாகு பொலனறுவையில் அரசாட்சியைக் கைப்பற்ற முன்னர் அவனுடைய தம்பி ஜெயவாகுவுடன் ஆறு முறை போர் புரிய நேரிட்டது. ஜெயவாகு சிம்மாசனம் ஏற அருகன் அல்லாவிடினும் அவன் புத்த குருமாருடைய உதவியைக் கொண்டே அவ்வாறு செய்தான். எனினும் ஈற்றில் 1 ம் விக்கிரமவாகு தனது நல்லாட்சியை நிலை நிறுத்தக் கூடியதாக இருந்தது. 1 ம் விக்கிரமவாகுவின் சகோதரிக்கு இரத்தின வல்லி என்று பெயர். 1 ம் விஜயவாகுவின் தங்கை மித்தா ஒரு பாண்டிய அரசகுமாரனை மணஞ்செய்து இவர்களுக்கு மானுபரணன் என்னும் அரச குமாரன் இருந்தான். மானுபரணன் தனது மைத்துனியான இரத்தின வல்லியை விவாகஞ் செய்தான். மானுபரணன் உறுகுணையில் அரசு செலுத்திக் கொண்டிருந்தான். அவனுடைய இரு சோதரரில் ஒருவனை கீர்த்தி ஸ்ரீமேகன் என்பவன் மானுசுலா என்னும் இடத்திலும் மற்றெருவனை ஸ்ரீ வல்லபன் தேவி நுவரையிலும் அரசு செய்தனர். 1 ம் விக்கிரமவாகு பொலனறுவையிலும் அரசு செய்தான். ஆகவே இலங்கையில் இக்காலத்தில் ஒரு அரசனுக்குப் பதிலாக நான்கு அரசர்கள் அரசு செலுத்தினுர்கள். கீர்த்தி ஸ்ரீமேகனும் ஸ்ரீவல்லபனும் 1 ம் விக்கிரமவாகுவுக்கு பெயரளவில் மாத்திரம் தான் அடங்கின சிற்றரசராய் இருந்தனர். இந்த நான்கு அரசர்கள் நன்முக அரசு செலுத்தாமையால் நாட்டில் கலகங்களும் குழப்பங்களும் அக்கிரமங்களும் அதிகரித்தன. உறுகுணை நாட்டில் 1 ம் விக்கிரமவாகுவின் ஆட்சியில் ஒருநாள் :—

காவ : உறுகுணை நாட்டு மன்னன் 1 ம் விக்கிரமவாகு வருகிறுர்......பராக்.....

விக்கி : நான் அனுப்பிய உளவு பார்ப்போர் வந்திருக்கிறுர்களா ?

காவ : வேந்தே ! தங்கள் வரவுக்காகக் காத்திருக்கிறுர்கள்.

1உள : மன்னவ ! ஒரு சிலர் எங்களுக்கு எதிராகச் சதி செய்து கொண்டு வருகிறுர்கள்.

2உள : மகிப ! சிலர் சனங்களை மன்னருக்கு எதிராக்குவதற்கு போதனை செய்து வருகிறுர்கள். தங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

1விக் : சரி ! நமது எதிரிகளின் இருப்பிடங்களில் அதிகம் திரவியங்களும் மானியங்களும் இருக்கின்றன. இதனுல் தான் அவர்கள் மெத்த அகம்பாவம் பிடித்தவர்களாக இருக்கிறுர்கள். சேனுவீரர்களே ! உடனே போய் அவர்களின் பொருள்களை எல்லாம் திருடிக் கொள்ளை அடித்து உபத்திரவம் செய்யுங்கள்.

சேனு : அரசே ! அவ்வாறே செய்கிறேம்.

கதை : எங்கே பார்த்தாலும் திகிலும் அழிவும் கலகமுமாய் இருந்தன. இக்காலத்தில் இலங்கையின் துயரத்தை நீக்க வல்ல பராக்கிரமபாகு என்னும் மகாவீரன் தோன்றினுன். அவன் உறுகுணையில் அரசு செலுத்தின மானுபரணனின் புத்திரன். 1 ம் விஜயவாகுவுடைய பேரன். பராக்கிரமபாகு என்ற பெயருக்குப் பகைவரை அடக்கும் கையை உடையவன் என்று பொருள். அவன் சிறந்த வீரன். சிறு வயதிலேயே அவன் இடத்தில் வீரனுக்கு உரிய இலட்சணங்கள் காணப்பட்டன. ஒரு நாள் ஒரு சோதிடன் பராக்கிரமபாகுவைக் கண்டான்.

பரா : சோதிடரே ! எனது கிரக நிலையை ஆராய்ந்து கணக்கிட்டு என்னுடைய எதிர்கால பலனைக் கூறுகிறீரா ?

சோ : ஆம் இளவரசே! தாங்கள் இலங்கை முழுவதற்கும் ஏக மன்னனுகத் திகழுவீர்கள் என்றே தங்கள் கிரக நிலைகளில் இருந்து அறியக்கிடக்கிறது. செயல் சீலனுகவும் பெரிய செல்வங்களையும் பெற்று விளங்குவீர்கள்.

பரா : இதோ சில நவரத்தினங்களை உமக்கு அன்பளிப்பாக தந்தோம். பெற்றுக்கொள்க.

சோ : இளவரசே என் இதயம் கனிந்த நன்றி.

கதை : இலங்கையின் அரசாட்சி நான்கு அரசர் கையில் அகப்பட்டிருப்பதும் அதனுல் சனங்கள் மிகவும் கஷ்டப்படுவதும் பராக்கிரமபாகுவுக்கு மிக மனவருத்தத்தை உண்டாக்கின. தனக்குரிய இராச்சியம் மிகவும் சிறியதாய் இருப்பதைப் பற்றி அவன் மிக்க விசனம் அடைந்தான். இலங்கை முழுவதையும் கைப்பற்றித் தானே ஏகச் சக்கராதிபதியாயிருந்து அரசாளவேண்டுமென்று அவன் தீர்மானித்துக்கொண்டான். ஆயினும் அவசரப்படாமல் நிதானமாய்த் தன் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது அவனுடைய அபிப்பிராயம். ஆகையால் அவன் அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தான். இயல்பாகவே அவன் மிக்க பலனும் தைரியமும் உடையவன். இளவரசர் அவசியம் பயில வேண்டிய யானையேற்றம், குதிரை ஏற்றம், வில்வித்தை, மல்யுத்தம் முதலியவற்றில் பராக்கிரமபாகு மிக்க தேர்ச்சி பெற்றுன். ஆடல் பாடல் முதலிய வித்தைகளையும் பயின்ருன். கல்வியை அவன் அலட்சியம் செய்யவில்லை. சிங்கள பாஷையில் உள்ள இலக்கிய இலக்கணங்களையும் மத சித்தாந்தங்களையும் நன்ருய்க் கற்றுணர்ந்தான். பிரசைகளுடைய பழக்க வழங்கங்களையும் நன்ருய்த் தெரிந்து கொண்டான்.

கதை : ஸ்ரீராமர், கௌதம புத்தர் முதலியவர்களுடைய சரித்திரங்களைக் கற்று அவர்களைப் போல் தானும் பிரசித்தியடைய வேண்டுமென்று ஆசைகொண்டான். இப்படியிருக்கும் போது மானுபரணன் இறந்தான். உடனே அவனுடைய சகோதரன் கீர்த்தி ஸ்ரீமேகன் உறுகுணைக்கு அரசனுனுன். பொலநறுவையில் அரசு செலுத்திக் கொண்டிருந்த விக்கிரமவாகுவும் இறந்தான். அவனுடைய குமாரன் 2ம் கயவாகு பொலனறுவையில் அரசு செலுத்தினுன். பராக்கிரமபாகு முதலில் உறுகுணை முழுவதையும் தன் வசப்படுத்த வேண்டு மென்று தீர்மானித்தான். அவன் தகப்பன் மானுபரணன் இறந்து போனமையால் பராக்கிரமபாகு கீர்த்தி ஸ்ரீமேகனுகிய தனது மாமனிடத்தில் வளர்ந்து வந்தான். கீர்த்தி ஸ்ரீமேகன் அரசசபையில் இந்நாட்களில் ஒரு நாள்........

அனைவ : கீர்த்தி ஸ்ரீமேகன் வாழ்க!

காவல் : மன்னவ! தங்களைக் காணுவதற்குச் சில தூதுவர்கள் காத்திருக்கிருர்கள்.

கீர்த்தி : அவர்களை அழைத்து வாருங்கள்.

தூதுவ : மன்னவ! தங்கள் மருமகன் இளவரசன் பராக்கிரமபாகு தனக்கு வேண்டிய ஆயுதங்களைச் சேகரித்து வருகிருர்.

2தூது : பராக்கிரமபாகு இளவரசன் தங்கள் சேனுதிபதி சங்கனுடைய கிராமமாகிய வடத்தலை அல்லது வத்தல கொடைக்கு பெரிய படைகளுடன் வந்திருக்கிருர். யான் அங்கிருந்து வந்துள்ளேன்.

3தூது : இளவரசன் பராக்கிரமபாகு தங்கள் உத்தரவின்றியே தங்கள் சேனுதிபதி ஆகும் கிராமத்துக்குள் திடீர்ப் பிரவேசம் செய்திருக்கிருர்.

கீர்த்தி : அமைச்சரே! இச் சந்தர்ப்பத்தில் யாது செய்ய வேண்டும்?

அமைச் : அரசே! பராக்கிரமபாகுவைக் கொல்லுவிப்பதற்கு இரகசிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மேலும் சேனுதிபதி சங்கனுக்குப் படை உதவி செய்யவேண்டும்.

கீர்த்தி : ஹ! ஹ! ஹ! மெத்தச் சரி! அப்படியே செய்விப்போம். சில வீரர்களை அழையுங்கள்.

வீரர்க : மன்னவ! வணக்கம்.

கீர்த்தி : பராக்கிரமபாகு இளவரசன் எம்மை அரசாட்சியினின்றும் நீக்குவதற்கு சதி செய்து வருகிறுன். ஆகவே அவனை ஒழித்தே தீர வேண்டும். அதைச் சாதிக்க உங்களால் கூடுமோ?

வீரர்க : அவ்வாறு செய்ய நாங்கள் உறுதி செய்கிருேம் மன்னவ!

கதை : தூதுவன கீர்த்தி ஸ்ரீமேகனிடம் சென்றிருந்ததை இரகசிய உளவு வைத்து பராக்கிரமவாகு அறிந்தான். உடனே அவன் சங்க சேனுதிபதியுடன் போருக்குக் கிளம்பினுன்.

(போர் நாதம், சங்கு ஒலி)

கதை : கீர்த்தி ஸ்ரீமேகன் அனுப்பிய படைகளை பராக்கிரமபாகு வென்றான்.

அனைவரும் : பராக்கிரமபாகு மன்னருக்கு ஜே !
பராக்கிரமபாகு மன்னருக்கு ஜே !
பராக்கிரமபாகு மன்னருக்கு ஜே !

கதை : அதன் பின்னர் 2 ம் கயவாகு ஆட்சி செய்த இராச்சிய எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தை அடைந்தனர். அதைக் கேட்டவுடன் 2 ம் கயவாகு தன் அமைச்சர் சபையைக் கூட்டினார். பராக்கிரமபாகுவை விரோதப் படுத்திக் கொள்ளாமல் அன்புடன் உபசரிப்பதே நல்லது என்று அவர்கள் யோசனை சொன்னார்கள். உடனே கயவாகு விலை உயர்ந்தபொருள்களை அவனுக்குப் பரிசாக அனுப்பித் தானே அவனை எதிர் கொண்டு சென்று நல்வரவு கூறி தன் இராச்சியத்துக்கு அழைத்து வந்தான். இவ்வாறு பல வகையான மரியாதைகளைப் பெற்ற போதிலும் அவன் தான் வந்த காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். பொலநறுவையில் இருந்து உளவுகளை எல்லாம் நன்ருய்த் தெரிந்து கொண்டான். தன் இனிமையான வார்த்தைகளாலும் தாராளமான கொடைகளினாலும் சனங்களை தன் பக்கமாகத் திருப்பிக் கொண்டான். அவனுடைய தோழர்கள் பாம்பாட்டிகளாகவும் கூத்தாடிகளாகவும் வியாபாரிகளாகவும் பிச்சைக்காரர்களாகவும், வேடம் போட்டுக் கொண்டு நாடெல்லாம் திரிந்து எல்லா உளவும் தெரிந்து கொண்டார்கள். இவ்விதமாக அந்த இராச்சியத்தைப் பற்றி கயவாகுவுக்குத் தெரிந்ததைவிட, அதிகமகாபராக்கிரமபாகு தெரிந்து கொண்டான். பராக்கிரமபாகுவை கயவாகுவுடைய இராச்சியத்தில் உள்ள சனங்கள் நேசித்தார்கள். 2 ம் கயவாகு தன் மீது பொருமை கொண்டிருப்பதை அறிந்த பராக்கிரமபாகு உறுகுணைக்குச் சென்று அங்கு இருந்த மாமனை கீர்த்தி ஸ்ரீமேகன் அவனை அன்புடன் நல்வரவேற்று உபசரித்தான். பிறகு அவன் மாமன் இறக்க பராக்கிரமபாகுவே உறுகுணையின் ஒரு பாகத்துக்கு அரசனானன். முதலில் உறுகுணையைப் பத்திரப் படுத்திக்கொண்டு கயவாகுவோடு யுத்தம் செய்வதற்கு வேண்டிய சேனை வீரர்களைத் தயார் செய்தான். யுத்தச் செலவுகளுக்கு பணம் வேண்டும். சனங்களிடத்தில் நியாயமான வரியை விதித்து அதைத் தண்டுவதற்குப் பிரத்தியேகமான சில மந்திரிகளை நியமித்தான். இரத்தினபுரியில் அகப்பட்ட இரத்தினங்களைப் பிறதேசத்தவர்களுக்கு விற்று ஏராளமான பணம் சம்பாதித்தான். பல்லாயிரம் போர் வீரர்களைச் சேர்த்து யுத்தப் பயிற்சி செய்தான். சிங்களரை விட தமிழர்கள் பலர், வேடர் பலர் சேர்ந்த பட்டாளங்களை ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தினான். இவ்விதமாக சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு தக்க சமயத்தில் பராக்கிரமபாகுவுடன் யுத்தத்தை ஆரம்பித்தான். பராக்கிரமபாகுவின் சேனைவீரர் பொலநறுவையை நோக்கிச் சென்றனர்.

கதை : அவர்கள் 2 ம் கயவாகுவைச் சிறைப்படுத்தி இராச்சியத்தைக் கைப்பற்றினர். பராக்கிரமபாகுவின் கட்டளைகளை மீறிப் போர் வீரர் சனங்களைக் கொள்ளையிட்டனர். ஆகவே அவர்கள் மானபரணன் என்னும் உறுகுணை நாட்டின் அரசனைத் தங்களுக்கு உதவி செய்யும் படி கேட்டார்கள். அவனுடைய சேனையையும் ஒன்ருய்ச் சேர்த்து பராக்கிரமபாகுவுடைய சேனையை முற்றிலும் தோகடித்தனர். ஆயினும் யுத்தம் முடிந்தவுடன் மானபரணன் தானே இலங்கைக்கு அரசனாக விரும்பினான். கயவாகுவுக்கு நஞ்சூட்டிக் கொல்ல முயற்சி செய்தான். கயவாகு தன் பகைவனான பராக்கிரமபாகுவுக்கு சில புத்த குருமாரை அனுப்பினான். பராக்கிரமபாகுவின் அரச சபையில் . . .

காவ : மன்னவ ! சில புத்த குருமார் தங்களைக் காண விரும்புகிருர்கள்.

பராக் : அவர்களை வரவழைத்துவா.

1ம் பிக் : மன்னவ ! நாங்கள் 2 ம் கயவாகு மன்னனால் அனுப்பப் பட்டவர்கள். அவருக்கோ பலம் குறைந்து போயிற்று. மேலும் அவர் நோயாளியாய் இருக்கிருர். அவருக்குப்பின் பட்டத்துக்கு வர பிள்ளையுமில்லை. ஆகையால் நீர் யுத்தத்தை நிறுத்திக் கொஞ்சக் காலம் பொறுத்திருங்கள்.

2ம் பிக் : வேந்தே ! அவ்வாறு பொறுத்திருந்தால் நீங்களே அவருக்குப் பின் இலங்கைக்கு அரசன் ஆகலாம். இதற்குச் சான்ருக ஒரு கற்சாசனத்தைநில நாட்டிவைப்பதாக வாக்குறுதி அளிக்கின்ருர்.

பராக் : அப்படியானால் யான் உங்கள் அரசன் வார்த்தைகளுக்குச் செவிமடுத்து உறுகுணைக்குத் திரும்புவேன். 2 ம் கயவாகு மன்னன் பொலநறுவையில் இருந்து தொடர்ந்து அரசு செலுத்தலாம்.

கதை : பிறகு துரோகியான மானுபரணன் கயவாகுவுக்குத் தூதனுப்பி தன்னுடன் சேர்ந்து பராக்கிரமபாகுவோடு யுத்தம் செய்யும்படி கேட்டான். கயவாகு அப்படிச் செய்ய ஒப்புக் கொள்ளவில்லை. அவன் பராக்கிரமபாகுவோடு செய்து கொண்ட ஏற்பாட்டின்படியே நடந்து கொண்டான். அதன்பின்னர் ஒரு புத்த விகாரைக்குச் சென்று :

2 ம் கயவ : யான் திரிபீடகத்தின் பெயரால் இராசரட்டை முழுவதையும் பராக்கிரமபாகுவுக்குக் கொடுத்து விட்டேன், என்று உறுதிப் படுத்துகிறேன். இதனை ஒரு கல்லில் எழுதி நாட்டும்படி கட்டளையும் செய்கிறேன்.

கதை : கயவாகு இதன் பின்னர் சீக்கரத்தில் இறந்தான். கயவாகு இறக்கவே மானுபரணன் இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காக யுத்தத்துக்கு ஆரம்பித்தான். பராக்கிரமபாகு அவனை எதிர்த்து யுத்தம்செய்து தோற்கடித்து பொலநறுவைக்குச் சென்று இலங்கையின் ஏக சக்கரவர்த்தியானான். பொலநறுவைக்குச் சகல வைபவங்களோடும் சென்றான்.
(சங்க நாதம், முரசு வாத்தியம் முதலியன)

எல்லோரும் : பெரிய அரசனே நீடூழி வாழ்க ! மகா பராக்கிரமபாகு மன்னன் வாழ்க !

கதை : 1153 ல் பராக்கிரமபாகு இலங்கையின் இணை இல்லாத மன்னனாக விளங்கினான். உறுகுணையில் மானுபரணனின் அன்னை சுகலா என்பவள் பராக்கிரமபாகுவுக்கு எதிராகப் போராடி நின்றாள். இந்த உள்நாட்டுக் கலகத்தை பராக்கிரமபாகு மன்னன் இலகுவாக அடக்கினான். இதன் பின்னர் வேறொரு பெரிய யுத்தத்தில் பராக்கிரமபாகு ஈடுபட வேண்டி நேரிட்டது. 1165 ம் ஆண்டு பராக்கிரமபாகுவின் அரச சபையில் ஒரு நாள்:

யாவரு : பராக்கிரமபாகு மன்னன் வாழ்க !

காவல் : அரசே ! இராமண்ணு தேசத்தில் இருந்து சில தூதுவர்கள் வந்திருக்கிறார்கள்.

பராக் : சரி அவர்களை அழைத்து வாருங்கள்.

1 ம் தூ : மன்னவ ! இராமண்ணு தேசத்து அரசன் அங்கு உள்ள சிங்கள நாட்டு மக்களைத் துன்புறுத்துகின்றான். சிங்கள மக்களுடன் எவ்வித வர்த்தகத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சட்டம் விதித்துள்ளான்.

2 ம் தூ : வேந்தே ! இராமண்ணு தேசத்துக்குச் சென்ற சிங்கள வியாபாரிகளை, அத்தேச மக்கள் கொள்ளை அடித்து விட்டனர். மேலும் எங்கள் நாட்டு தூதுவர்களை அவமதித்து நிந்தைகள் செய்துள்ளான், இராமண்ணன் தேசத்து மன்னன்.

3 ம் தூ : மகிப ! தங்கள் தளகர்த்தனின் தலைமையில், பரதகண்டம் சென்று கொண்டிருந்த இலங்கை அரசகுமாரியை, பலாத்காரமாக காம்போடியா நாட்டைச் சார்ந்த இராமண்ணு தேசத்தரசன் கவர்ந்துள்ளான்.

பராக் : அப்படியும் ஆய் விட்டதா ? எங்கள் சேனைத் தலைவர் தமிழ்ப் பெருமக்களைச் சார்ந்த அதிகாரம் அவர்களே! நீங்கள் எங்கள் படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லுங்கள். சேனாதிபதி கீர்த்தி நகரகிரி உங்களுக்குத் துணைபுரிவார். சிங்கள நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவது உங்களின் பொறுப்பாகும்.

அதிகா : மன்னவ ! இலங்கை நாட்டின் நற்பெயருக்கு ஒரு பங்கமும் ஏற்படாதவாறு நான் பார்த்துக் கொள்ளுகிறேன். எங்கள் நாட்டின் பொன்னான புகழுக்காக எமது உயிரைத் திரணென மதித்துப் போராடச் சித்தமாக இருக்கின்றோம்.

பலர் : ஆம் அரசே ! வாக்குறுதி அளிக்கின்றோம்.

கதை : அதிகாரம் என்னும் தமிழ் சேனாதிபதியும் கீர்த்தி நகரகிரி என்னும் சிங்கள சேனாதிபதியும் இராமண்ணு தேசத்தின் மீது படையெடுத்து அத் தேசத்தின் தலை நகரினுட் புகுந்து பராக்கிரமபாகுவின் ஆட்சியை அத் தேசத்தில் பிரகடனப் படுத்தினர். இராமண்ணு அரசனை இலங்கை அரசனுக்கு திறை கட்டச் செய்தான். அதன் பிறகு தென்னிந்தியாவுடன் பராக்கிரமபாகு போர் தொடுத்தான். அக்காலத்தில் பாண்டி நாட்டை குலசேகரன் என்னும் சோழ நாட்டரசன் அடக்கி சோழ மண்டலத்தின் ஒரு பகுதியாக வைத்திருந்தான். பாண்டி நாட்டரசன் பராக்கிரமபாகு மன்னனிடம்

வந்து படைத்துணை அனுப்புமாறு வேண்டி நின்ருன். பராக்கிரமபாகு லங்காபுரா என்னும் சிங்கள சேனுதிபதியை இந்தியாவுக்கு ஒரு பெரிய படையுடன் அனுப்பினுன். ஆயினும் மதுரை சோழரால் கைப்பற்றப்பட்டது. லங்காபுரா வீர தீரம் படைத்தவன். அவன் இராமேஸ்வரத்தை இலங்கையின் ஆட்சியின் கீழ் வைத்தான். பின்னர் ஒவ்வொரு நகராகப் பிடித்து மதுரையையும் கைப்பற்றினுன். அங்கு ஆட்சி செய்து அரசனை சிம்மாசனத்தினின்றும் இறக்கி அவன் மகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி அவனை பராக்கிரமவாகுவுக்குத் திறை கொடுக்க ஒழுங்கு செய்தான். பராக்கிரமபுரி என்னும் பெயர் உள்ள நகரத்தை தென்னுட்டில் அமைப்பித்தான். பராக்கிரமபாகு தமது மதமாகிய பௌத்த மதத்துக்குச் சிறந்த சேவை செய்தான். பராக்கிரமபாகு பல விகாரைகளில் உள்ள பௌத்த குருமாரை அழைத்து பௌத்த சங்கங்களை திருத்தி அமைத்தான். பராக்கிரமபாகு அநுரதபுராத்திலும் வேறு நகரங்களிலும் பல கட்டடங்களைக் கட்டுவித்தான். ஆயினும் பொலநறுவை நகரத்தையே சிறப்பாக அலங்கரித்தான். பல பூங்காக்களையும் குளங்களையும் நீந்துகூடங்களையும் அலங்கார மண்டபங்களையும் அமைப்பித்தான். பல பகுதிகளில் உள்ள விகாரைகளில் புத்த விக்கிரகங்கள் இம்மன்னனுல் அமைப்பிக்கப்பட்டன.

இம்மன்னன் ஆயிரக்கணக்கான குளங்களையும் பல வாய்க்கால்களையும் வடிகால்களையும் அமைப்பித்தான். பொலநறுவையைச் சுற்றியோர் கொத்தளத்தையும் அமைப்பித்தான். ஆபத்து வருங்காலங்களில் புகலிடங்களாக உபயோகமாகும் பொருட்டுப் பல இடங்களில் கோட்டைகளைக் கட்டுவித்தான். அம்பன் கங்கையை மின்னேரியாக் குளம், கந்தளாய்க் குளம் முதலிய குளங்களுடன் நூறு மைலுக்கு மேல் உள்ள வாய்க்கால் தொடுத்து வைத்தான். இது நீர்ப்பாய்ச்சுதலுக்கு மக்களுக்குச் சிறப்பாக உபயோகமாக இருந்தது. இதுவே "பராக்கிரமோததி" என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. பராக்கிரமபாகு தன் நாட்டிற்கு வளத்தளவிலும் வலியளவிலும் விட்ட குறை ஒன்று மேனுமில்லை. பராக்கிரமபாகு என்பவனே இலங்கை மன்னர்களில் தலை சிறந்த மன்னனுக விளங்கினவன். அவனுடைய சிலை என்று கூறப்படும் உருவச் சிலை தோப்ப வாவிக்குச் சமீபத்தில் உளது. பராக்கிரமபாகுவின் தமிழ் கல்வெட்டு ஒன்று நயினுதீவில் நாகபூசணி அம்மன் கோவிலுக்கு முன் காணப்படுகின்றது. பராக்கிரமபாகு இலங்கை மக்களுக்குச் சுபிட்சத்தைக் கொடுத்தான். பிற நாடுகள் மீது போர் தொடுத்து இலங்கையின் செல்வாக்கைப் பெருக்கினுன்.

(வானெலி)

---

## ஹஸ்திசைலபுரம் . . . .

(10ம் பக்கத் தொடர்ச்சி)

**முதலியார் திரு. செ. இராசநாயகம்** அவர்களிடமிருந்து பெற்றும். முதற் செய்யுளின் முதற்பதம் "**அத்திகல்**" என விருப்பதைக் கண்டு குருநாக்கலின் ஐதீகங்களைப் பற்றிச் சில எழுதினும். அவைகளின் சுவைபற்றி ஈண்டுத் தருகின்றேம்.

அத்திகல் அரசன் இலங்கையர் கோமான் அரக்கனைச்
சிரத்திறை வதிந்தோன்.

மெத்தவந் தனது மித்திரரிருவர் யாழ்நகர்க் கே
குதலறிந்து

சித்திரத்தபதி மயன்றனை மகவான் றேரினும் வெல்
லவாயிரந்தேர்

இத்தணந் தருதியென்னவும் அமைத்தான் ஈரெழு
உலகமும் உவப்ப.

அங்கியும் வீமன் அப்பனும் வம்பின் ஆயிரம்
ரதங்களைத் தழைமின்

செங்கண் நாயகனும் இந்திரன் சுதனும் சேருமிச்
செல்வரைக் கணமென்

றிங்குநான் சொல்லுமுன் கொளும்பி னுக்கேற்றி
யேகுமின் னென்னலும்மலை யோன்

கங்கைகள் குடித்தார் யானைகள் புசித்தார் காற்று
நற்றேழனும் கழித்தே

வாயுதேயுவும் வண்டியிழுத்துமே பாயச்சென்று
பயந்து பின்ஒடின

தேயம்ஐந்து திணைமலைதூரமும் போயரேகும் புகை
யிலைமுன்னரே

தனத்துமன்னன் தனரதந்தானுமே
எனத்துணை யெனவெள்க விரைந்தனர்
மனத்தைத்தானும் மதிக்கிலமென்கிலர்
கனத்தைக் கக்கிக் கணத்தினிற் சென்றுளார்.

இரத்தினத் துரையும் இராசநாயகமும் ஹவலக் எனுங்கலனேறி
கர்த்தரின் துணையால் சிந்து யாத்திரையாய்க் களிப் புடன் வருவதையறிந்து
மித்திரத்திரைகள் மணித்தலை பணித்தார் மீன் களுமாடல்கள் புரிந்தார்
கைத்தலம் நீட்டி யாழ்நகர் மக்காள் களிப்புடன் வருகென விளித்தாள்.

அக்காலத்தில் குருநாக்கல்–யாழ்ப்பாணப் புகையிரத வீதி திறக்கப்படவில்லை. ஆகையால் குருநாக்கல் வாசிகள் புகையிரத மூலமாகக் கொழும்பு சென்று கப்பல் மூலமாக யாழ்ப்பாணஞ் செல்வோராயினர். முதலியார் **திரு. செ. இராசநாயகம்** அவர்கள் அக்காலத்தில் குருநாக்கல் கோட்டில் கடமை செய்தார். முதலியாரவர்கள் தம்முடைய விவாகத்திற்காக ஒரு மாச லீவுடன் யாழ்ப்பாணம் போகிருரெனக் கேள்வியுற்ற புலவர்கள்காகித உறையொன்றினில் மேற்கூறிய செய்யுட்களை எழுதியனுப்பினராம். இச்செய்யுட்களையும் புலவர் அவர்கள் பாடிய சில கீர்த்தனைகளையும் எமக்கு உதவிய முதலியாரவர்களுக்கு நாம் மிகவும் கடப்பாடுடையோம்.

---

## கப்பித்தாவத்தை விநாயகர் . . . .

(13ம் பக்கத் தொடர்ச்சி)

வசித்த குடும்பங்கள் கோவிற்பிரகாரம் பூராவையுமே மிகவும் அசிங்கப் படுத்திக்கொண்டிருந்தார்களாம். 1942ல் விவாகமான ஸ்ரீ சர்மா அவர்களுக்கு இன்று பதினொரு குழந்தைச் செல்வங்களைப் பிள்ளையார் அருளி இருக்கிறர். தான்தான் பிரம்மச்சாரியென்றுலும் மற்றவர்களாவது ஏராளமான குழந்தை குட்டிகளுடன் இருக்கட்டுமே என்பது எந்த விக்கினந் தீர்ப்பவனின் எண்ணம் போலும். தினகரன் தனது ஞாயிறு வெளியீட்டை ஆரம்பித்தபோது பூசைவழிபாடுகளை நடத்தியவரும் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மூன்று நிறுவனங்கள்

இன்று கப்பித்தாவத்தை இருக்கும் உன்னத நிலை அனைவரும் அறிந்த விஷயமே. மனோரம்மியமான சூழலில் புனிதமாகவும் கம்பீரமாகவும் கோவில் காட்சியளிக்கின்றது. தினசரி பலநூற்றுக் கணக்கில் வழிபடுவோர் வருகின்றனர். கொழும்பு ஏழு போன்ற அந்தஸ்துள்ள இடங்களில் உள்ளவர்களும் இன்று இக்கோவிலையே நாடுகின்றனர். கோவில் வாசல்வரை இன்று நல்ல சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்க்கல்விக்கூட மொமொன்றும் 1954ம் ஆண்டளவிலிருந்து இங்கு இயங்கிவருகின்றது. வருடந்தோறும் கடந்த முப்பத்தாறு வருடங்களாகப் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைப் போஷிக்கும் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையும் தற்பொழுது சில ஆண்டுகளாக இங்கேயே இயங்கி வருகின்றது. கோவில், பாடசாலை, கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை ஆகிய இந்த மூன்று நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று ஆத்மீகத்தொடர்புடன் இயங்கி வருகின்றன. இவையனைத்திலும் திரு சின்னத்தம்பி ஐயா அவர்கள் நடுநாயகமாக நின்று உழைக்கின்றுர்கள். கோவிலுக்குத் தொலைபேசி வசதியும் உண்டு. பல இன மத மக்களும் இக்கோவிற் தரிசனத்திற்காக இன்று வருகின்றனர். தினசரி வெளியூர் யாத்திரிகர்கள் வந்து தங்கிப் போவதற்கும் இங்கு குறைவில்லை. கொழும்பில் யாத்திரிகர்கள் வந்து தங்கிப் போகக்கூடிய இடங்களில் இன்று கப்பித்தாவத்தை முதல் ஸ்தானம் வகிக்கின்றது.

கப்பித்தாவத்தை விநாயகப்பெருமான் கீர்த்தி மிக்கவர் என்பது பலரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இம் மாதம் இரண்டாவது முறையாகப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு கோவில் புதுப்பிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது எல்லாம் விக்கினம் தீர்க்கும் விநாயகன் அருளே. கப்பித்தாவத்தையின் எதிர்காலம் மேலும் பிரகாசமாக இருக்க எல்லாம் வல்ல திருவருள் அருள் பாலிப்பதாக. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இக்கோவிலும் அதன் சுற்றுப்பிரகாரமும் வாவியாற்சூழப்பட்ட அழகிய தீவாகக் காட்சியளித்தது. இன்று அழகிய கோட்டை மதிலால் சூழப்பட்ட கவர்ச்சி மிக்க பெட்டகத் தீவாகக் கப்பித்தாவத்தை காட்சியளிக்கின்றது.—சுபம்.

# சுன்னுகம் செல்லாச்சி அம்மையார்

திரு ச. அம்பிகைபாகன்

தமிழ் மக்கள் செய்த தவப்பயனுகக் காலத்துக் குக் காலம் பெரியார்கள் தோன்றிச் சமய உண்மை களை நிலைநாட்டியுள்ளார்கள். இப்பெரியார்களுள் ஆண்கள் மாத்திரம் அல்லாமல், ஔவையார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவ தியார் போன்ற பெண்மணிகளும் இருந்திருக்கின் றனர். இப்பெண்ணடியார்கள் பரம்பரையில் வந்தவரே **சுன்னுகத்துச் செல்லாச்சி அம்மையார்.**

**பிறப்பு :**

இவ்வம்மையார் யாழ்ப்பாணத்தின் வடபகுதி யிலுள்ள சுன்னுகம் என்னும் கிராமத்தில், ஒரு பிரபலமான வேளாண் குடும்பத்தில் **கணக்கர் முத்துக்குமாரு** என்பவருக்கு முதற் குழந்தையாக 1863 ம் ஆண்டில் தோற்றினுர். அம்மையாரின் தந்தையார் சுன்னுகம் **முத்துக்குமாரக் கவிராயரின் மகளின் மகனுவர்.** அம்மையாருக்கு மூன்று சகோதரரும், ஒரு சகோதரியுமிருந்தனர். சகோத ரருள் ஒருவரான திருவம்பலம் என்பவர் சுன்னுகம் கிராமத்தலைவராய் விளங்கினர். அம்மையார் சுன்னுகத்திற் பிறந்து அங்கேயே வாழ்ந்தபடியால், மக்களால் " **சுன்னுகத்தம்மா** " என்றழைக்கப்பட் டனர்.

இவர்கள் வீட்டுக்கருகிலிருந்த சிறு பாடசாலையில் ஓரளவு கல்விபயின்ருர். ஆனுல் இவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியை வீட்டிலேயே பெற்றுக்கொண்டாரென்று கூறுவதே பொருத்த மாகும். **தமக்கு இல்வாழ்க்கையிலும் துறவு வாழ்க்கையிலும் வழிகாட்டியாக விளங்கியது நாவலர் அவர்களுடைய நான்காம் பாலபாடம் என்று அம்மையார் கூறுவர்.** இப்பாலபாடத்திற் காணப்படும் " **கற்பு** " " **வீட்டு வேலை** " " **வீட்டுக் கொல்லை** " என்பன தமக்கு மிகவும் பிரயோ சனமாகவிருந்தனவாகக் கூறியுள்ளார். **இக்காலத் தில் சிறுகதைகளையும், தொடர் கதைகளையும், படிக்கும் நம் பெண்கள் நான்காம் பாலபாடம் போன்ற புத்தகங்களைப் படித்துப் பயன் பெறுவார்களாக.**

**இல்வாழ்க்கை :**

அம்மையார் வைத்தியப் பகுதியில் அப்போதிக்க ரியாகக் கடமையாற்றிய **திரு. முதலியார் தம்பு** என்பவரை 1889 ம் ஆண்டில் விவாகம் செய்தனர். இவ்விவாகத்தின் பயனுக ஒரு மகனும் ஒரு மகளும் தோன்றினர். இவ்விருவரும் பிள்ளைகள் பேரப்பிள் ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அம்மையார் அருமையாக வளர்த்து வந்த குழந்தை, அவருடைய மகளின் மகளே. அம்மையார் இக்குழந்தையிடம் காட்டிய அன்பைக் கண்டவர் களுக்கு அன்னை சாரதாமணிதேவியார் தமது சகோ தரரின் பேரப்பிள்ளையான ராது என்னும் பிள்ளைமீது காட்டிய அன்பு ஞாபகத்துக்கு வரும். அம்மையார் இல்வாழ்க்கையிலிருந்தபோது, தமது குடும்பக் கடமைகளைப் பதிவிரதா தர்மத்துக்கு எடுத்துக்காட்டாக நடாத்திவந்தார்.

கணவனுடைய போக்கு எப்படியிருந்த போதிலும், அம்மையார் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் தவறினுரல்லர். மேலும் குடும்பக்கடமைகளோடு சிவதொண்டு புரிவதிலும் ஈடுபட்டிருந்தார். ஆலயங்களில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல் முதலிய தொண்டுகளில் ஈடுபட்டனர். இவர் வழிபாடு செய்து வந்த ஆலயங் கள் **சுன்னுகம் பிள்ளையார் கோயிலும், மயிலணிச் சிவன் கோயிலுமாகும்.** இவ்வாலயங்களில் காலத்துக்குக் காலம் புராண படனங்களை நடாத்து வித்து வந்தார். ஒருமுறை மயிலணிச் சிவன் கோயிலில் இவர் வழிபாடு செய்யும்போது, தீபாரதனை நடக்கும் நேரத்தில் " **அம்மாவும் அப்பா வும் என்னை அழைக்கின்றனர்** " என்று கூறிக்கொண்டு கர்ப்பக்கிருகத்துள் நுழையப்போனு ரென்றும், வாசற்படிவரை சென்றவரை அருகில் நின்றவர்கள் தடுத்தனரென்றும் கூறுவர். இதனுல் இவர்களுடைய தீவிரபக்தி ஒருவாறுவிளங்கும்.

**புனிதச் சூழல் :**

மேற்கூறியவற்ருல், இவர் இல்வாழ்க்கையி லிருந்தபொழுது சரியைமார்க்கத்தைக் கைக்கொண் டாரென்று கொள்வது பொருத்தமாகும். கடைசிக் காலம்வரை அம்மையார் புனிதத்தில் நாட்டம் உடை யவராய், தாம் வசித்த வீட்டையும் வளவையும் புனிதமாக வைத்திருந்ததை அன்பர்கள் அறிவார் கள். வீடு மாத்திரமன்றி வளவிற் பெரும் பகுதி யும் மெழுக்கிடப்பட்டிருக்கும். அங்குள்ள கிணறு காலத்துக்குக் காலம் இறைக்கப்பட்டு நீர் பளிங்கு போலிருக்கும். இறைவன் சாந்நித்தியம் எங்கும் பிரகாசிக்கும்.

**கைம்மை நிலை :**

1905 ம் ஆண்டு ஆடிமாதம் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் தேர்த்திருவிழாவன்று, நோய் வாய்ப்பட்டிருந்த அம்மையாரின் கணவர் இறந்தார்.

கணவர் இறக்கும் நேரத்தையும் தினத்தையும் அம்மையார் ஒரு மாதத்துக்கு முன்னமே கூறி யிருந்தாரென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. தமது தாலிக்கொடியைக் கழற்றி கணவரின் பிரேதத்தில் போட்டபோது "**இன்றே என் உலக வாழ்க்கை முடிந்தது**" என்று கூறினர். அவரின் பிற்கால வாழ்க்கையை அறிந்தவருக்கு இக்கூற்றின் பொருள் நன்கு புலப்படும். **கணவர் இறந்ததும் அணிகலன்கள் சகலதையும் துறந்து, வெள்ளையுடை தரித்து உண்டியைச் சுருக்கி, கைம்மை நோன்பு மேற்கொண்டனர்.** காரைக்காலம்மையார் கணவன் தம்மைத் துறந்தான் என்றதும் பேயுருவம் கொண் டது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்து தர்மத்தின் படி பெண்கள் தங்கள் உடம்பைப் பேணுவதும் தங்களை அழகு படுத்துவதும் கணவனின் பொருட்டே. இத்தர்மத்தின்படி வாழ்ந்து அம்மையார் கணவ ரிறந்ததும் துறவு நிலையை மேற்கொண்டது ஆச்ச ரியமன்று.

இக்காலத்தில் அம்மையார் தினந்தோறும் குளித்துக் கடவுள் வழிபாடுசெய்த பின்னர் தமது தாயாரோ மகளோ பாகம் செய்துவைத்த உணவை ஒருவேளை உட்கொள்ளுவர். கணவர் இறந்த பின்னர் அம்மையார் ஒரு பொழுதும் சமையல் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக் காலத்திற்றான் அம்மையாருக்குத் திருவாசகம், சில்லறைக்கோவை முதலிய நூல்களை அவரின் தம் பியார் **திரு. ஐயாத்துரை** என்பவர் கொடுத்தார். திருமுறைகளை இடைவிடாது ஓதியதனுல்தான் தமக்கு திருவருள் கைகூடியதாக பிற்காலத்தில் கூறுவர்.

**கிரியை வாழ்க்கை :**

அம்மையார் மேற்கூறியவாறு கைம்மை நோன்பு அநுட்டித்துவரும் காலத்தில், கனவில் மந்திரோப தேசம் பெற்றுர். அந்த உபதேசத்தின் தன்மையை விளங்காத அம்மையார், அயலில் வசித்த **சதா சிவக்குருக்கள்** என்னும் பிராமணரை அழைத்து அவருக்குத் தாம் கனவில் பெற்ற உபதேசத்தைக் கூற, அக்குருக்கள் அவ்வுபதேசத்தின் பொருளையும் பெருமையையும் அம்மையாருக்கு விளக்கினுர்.

பின்னர் ஓர் இலிங்கம் அம்மையார் கைக்குக் கிட்டியது. இதை அம்மையார் வளவிலுள்ள ஒரு மரத்தின்கீழ் கண்டெடுத்தாகக் கூறுவர். இதில் அதிசயமென்ன வென்றுல் அம்மையார் கணவி றிறந்த பின் வீட்டைவிட்டு வெளியே போனது கிடையாது. இறைவனருளாலேயே தமக்கு இலிங்கம் கிடைத்ததாக அம்மையார் நம்பினர். இந்த இலிங்கத்துக்கு முறையாக வழிபாடு செய்தனர்.

**தியானமும் சமாதியும் :**

இப்படி வழிபாடு செய்து வருங்காலத்தில் அம்மை யாருக்கு மனவொருமையேற்பட்டு நெடுநேரம் தியானத்தில் அமர்ந்திருப்பார். இந்நேரங்களில் கருவி கரணங்களெல்லாம் ஒடுங்கிவிடும். சிறிது காலஞ்செல்ல தியானநிலை முதிர்ந்து சமாதிநிலை வரப்பெற்றுர். இராமகிருஷ்ண பரமஹம்சருக்குப் போல் இவருக்கும் சமாதிநிலை அடிக்கடிவரும். இந்தக்காலத்தில்தான் பூசாரிக்கிழவனுர் என்னும் பெரியார் இவரிடம் வந்தார். சமாதி நிலையிலிருக் கும் போது கிழவனுர் மூலமந்திரத்தைக் காதில் ஓதுவார். உடனே அம்மையார் விழிப்பு நிலைக்கு வருவார். இராமகிருஷ்ணருக்கும் அவருடைய மருகர் கிருதே இப்படி மந்திரத்தை ஓதி விழிப்பு நிலையை வரச் செய்ததை அவருடைய சரித்திரத்தில் நாம் படிக்கிறேம்.

சமாதிநிலையெய்திய பின்னர் உறங்கினவன் கைப் பொருள்போல சகல கிரியைகளையும் விட்டனர். குளித்தல், மயிர்கோதுதல், பல்துலக்கல் முதலிய உடல் சம்பந்தமான செயல்களைத் துறந்தனர். மயிர் சடைபின்னிவளரத் தொடங்கி அம்மையார் நின்றுல் நிலத்தைத் தொடுமளவுக்கு வளர்ந்தது. இவர் இக்காலந்தொடங்கி வாழ்ந்த வாழ்க்கை சிவஞானசித் தியாரில் சீவன் முக்தர் வாழ்க்கையைப் பற்றிக் கூறியதற்கெடுத்துக்காட்டாக விளங்கியது.

**"ஞாலமதில் ஞானநிட்டையோருக்கு நன்மை**
**பொடுதீமையிலை நாடுவதொன்றில்லை**
**சீலமிலைத் தவமில்லை விரதமோ டாச்சிரமச்**
**செயலில்லை தியானமில்லை சித்தபலமில்லை**
**கோலமிலை பலனில்லை கரணமில்லை**
**குணமில்லை குறியில்லை குலமுமில்லை**
**பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணமருவிப்**
**பாடலொடு ஆடலிவை பயின்றிடினும் பயில்வர்"**

அம்மையார் இவ்வளவு உயர் நிலையடைந்தாரே இவருக்கு வழிகாட்டிய குருயார் ? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு இவருக்கு மற்றையவருக்குப் போல் குருவிருக்கவில்லை என்பதே விடை.

இறைவனே அறிவுக்கறிவாகியிருந்து வழிகாட்டினனென்று கூறுவதே பொருந்தும். பக்குவமடைந்தவருக்கு இறைவன் இப்படி அருள் புரிவானென்பது சாத்திரத்துக்கும் உடன்பட்டதாகும். இது சம்பந்தமாக நடந்த ஒரு சம்பவத்தை இங்குக் கூறுவது பொருத்தமாகும். அம்மையாரைப்பற்றிக் கேள்விப்பட்ட ஒரு சுவாமியார், இவருக்குக் குருவில்லாதபடியால் பூரணநிலையடைந்திருக்க முடியாதென்று கருதி உபதேசஞ் செய்யும்பொருட்டு இவர் வீட்டுக்குப் போனுர். இந்தச்சுவாமியார் வந்த நோக்கத்தைத் தமது ஞானதிருஷ்டியால் அறிந்த அம்மையார் **" யாருக்கு உபதேசஞ் செய்ய வந்தாய்! போ வெளியே "**, என்று அதட்டித் துரத்தினுர். இப்படி வருபவரின் தன்மையைத் தாமாகவே உணருந்தன்மை அம்மையாருக்கிருந்தது.

தமிழ்த்துறையினும், விஞ்ஞானத்துறையினும் பாண்டித்தியம் பெற்ற ஒருவர் அம்மையாரிடம் வருவார். அவருக்குத் துறவு வாழ்க்கையில் நாட்டமிருந்தபோதிலும், அவர் உள்ளத்தில், கல்விக்கும் அதனுல் ஏற்படும் புகழுக்கும் முதலிடம் கொடுத்திருந்தார். ஒரு நாள் இவர் வந்ததும் அம்மையார் **" கல்வியே பெரிதென்று கதறித் திரிவர் கயவர் "** என்று கூறினர். இவரை அறிந்தவர்கள் அம்மையார் இவரைப் பற்றிக் கூறியது உண்மையென்பதை உணர்வர். கடைசிவரைக்கும் இவர் கல்வியென்னும் பல்கடலிலிருந்து பிழைக்கவில்லை.

**அடியார் வருகை :**

அம்மையாரின் ஞானவாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சில பெரியார்களைப் பற்றி இங்குக் குறிப்பிடுவது அவசியம். **இவர்களுள் முதலிடம் யோகர் சுவாமி அவர்களுக்கே உரியது. அம்மையாருக்கும் சுவாமிகளுக்கும் இருநத ஆத்மீகத் தொடர்பை வர்ணிப்பதற்கு ஒரு சேக்கிழார் வேண்டும். ஒருவர் நினைக்க மற்றவர் செயலாற்றுவர். இருவரையும் ஒருமித்துக் கண்டவர் அக்காட்சியை இலகுவில் மறக்கமாட்டார்கள்.** காடு செல்லாமல் மலையேருமல் வீட்டிலிருந்தபடியே இருந்து பூரண அநுபூதி நிலையை அடைந்த அம்மையாரின் சிறப்பை அன்பர்களுக்குச் சுவாமிகள் விதந்தோதுவர். **அம்மையாரும் பல சன்னியாசிகளைத் தாம் கண்டதாகவும், ஆனல் யோகர் சுவாமிகளைப் போன்ற ஒரு பூரணத்துறவியைத் தாம் கண்டதில்லையென்றும் பன்முறை கூறியுள்ளார்.** இருவருக்கும் இடையில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளை கால கதியில் அன்பர்கள் அறிவார்கள். அம்மையாருக்குப் பலவிதத்தில் தொண்டாற்றிய பூசாரிக் கிழவனுரென்னும் ஆறுமுகம் என்பவரை முன்பு குறிப்பிட்டுள்ளேன். இவர் ஏழாலை வாசி, மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். தாமாகத் தயாரித்த ஒருவேளை உணவை உட்கொள்ளும் நியதியை உடையவர்; மாலையில் அரிசியுடன் இலை, குழை, காய் முதலியவற்றை வேகவைத்து உண்பர்.

**சித்திகள் :**

அம்மையார் சித்திகள் கைவரப்பெற்றவர். பலருக்குத் தீராதநோய்களை மாற்றியுள்ளார். இது சம்பந்தமாக இவர் மகாசமாதியடைந்த பொழுது **ஆங்கில இந்துசாதனத்தில்** வெளிவந்த அசிரிய வசனத்தில் கூறப்படுவது பின்வருமாறு: **" அநுபூதிமான்களுக்கு அவர்களை அறியாமலே பலவித பேராற்றல்கள் ஏற்படுகின்றனவென்பது இந்துக்கள் கொள்கை. செல்லாச்சி அம்மாவுக்கும் பலவிதமான சித்திகள் கைவந்தன. இதனுல் பலர் அவரை அடைந்தனர். இவர்களுட் சிலர் அவருடைய ஆசியைப் பெறுவதற்கும், வேறு சிலர், தங்களுக் கேற்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்கும், அவரை அடைந்தனர், ஒரு சொற்பவிபூதியோ அல்லது வாய்ச்சொல்லோ அல்லது அவருடைய கரத்தாற் தொடுவதோ அல்லது அவருடைய கிணற்றுக் குளிர்ந்த நீரோ, தான் மக்களின் பிணி தீர்க்கும் மருந்தாகும் ".** அம்மையாரில் அதிக விசுவாசமுள்ளவரும் சகோதரி முறையுள்ளவருமான ஒருவரின் மகனுக்கு அவியல் சுரம் ஏற்பட்டு ஆபத்தான நிலையை அடைந்து விட்டார். வைத்தியருங் கைவிட்டார். அந்தப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டுபோய் தாயார் அம்மையாரின் முன்வளர்த்தினுர். அப்பொழுது சுரம் 104° இருக்கும். அம்மையார் தாயாரைப் பிள்ளைக்குத் தீர்த்தக்கிணற்றில் (அம்மையார் வீட்டுக் கிணற்றுக்குத் தீர்த்தக் கிணறு என்று பெயர்) தோயவார்க்கும்படியும் தீர்த்தத்தைப் பருக்கும்படியும் கூறினர். அம்மையாரிடம் பூரண விசுவாசமுள்ள தாயானபடியால் அப்படியே செய்தார். பையனும் சுரம் நீங்கிப் பிழைத்தான். இப்படிப் பிழைத்தவர் இப்பொழுதும் நம் மத்தியில் வாழ்ந்து வருகிருர்.

இன்னெருவருக்கு வயிற்றுளைவு, சகல வைத்தியம் செய்தும் பலிக்கவில்லை. கடைசியாக அம்மையாரிடம் வந்தார். அவர் ஒரு வாழைப்பழத்தைச்

(24 ம் பக்கம் பார்க்க)

# அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் முதற் பேரவை

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தால் கூட்டப்பெற்ற அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளரின் முதற்பேரவை ஏப்ரில் 28, 29ந் தேதிகளில் கொழும்பிலுள்ள ஸ்கிராக் கல்லூரி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இருதினங்களாக நடைபெற்ற இப்பேரவையில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான எழுத்தாளர்களும் இலங்கையிலுள்ள எழுத்தாளர் சங்கங்களும் கலந்து கொண்டன. யாழ் இளம் எழுத்தாளர் சங்கம், மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் என்ற ஸ்தாபனங்கள் மகாநாட்டில் பங்குபற்றின. தீவுப் பகுதி எழுத்தாளர் சங்கம் மகாநாட்டுக்குத் தன் ஆசிகளை அனுப்பியிருந்தது. இந்தியாவிலிருந்து புகழ் பெற்ற எழுத்தாளர்களான டாக்டர் மு. வரதராசன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அறிஞர் மயிலை சீனி வெங்கடசாமி, சிதம்பர ரகுநாதன், நா. பார்த்தசாரதி, ப. ஜீவானந்தம் போன்ற பல பெரியோர்களும், எழுத்தாளர் சங்கங்களும் மன்றங்களும் தம் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தன. கொரியா, சீனு முதலிய தூர தேசங்களிலிருந்தும் மகாநாட்டுக்கு ஆசிச் செய்திகள் வந்திருந்தன.

அதியுன்னத கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ அவர்களும் பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா அவர்களும், கலாசார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா அவர்களும் மகாநாட்டிற்குச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள்.

மகாநாட்டை ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மன்றத்தின் காரியதரிசிகளில் ஒருவரும் பிரபல சிங்கள எழுத்தாளருமான திரு. ரத்னே தேசப்பிரிய பூரண கும்பத்துடன் கூடிய குத்து விளக்கில் மணிச்சுடர் ஏற்றி மங்களகரமாகத் தொடங்கி வைத்து விரிவான சொற்பொழிவொன்றுற்றினுர்.

மாகாநாட்டை ஒட்டி வேறு மூன்று முக்கிய விழாக்களும் நடைபெற்றன. அவையான புத்தகக் கண்காட்சித் திறப்பு விழா, எழுத்தாளர் புகைப் படக் கண்காட்சித் திறப்பு விழா, புதுமை இலக்கிய மலர் வெழியீட்டு விழா என்பனவாகும் இவற்றை முறையே கலாநிதி எஸ் வித்தியானந்தன், ஜனுப் எம். எம். உவைஸ் எம், ஏ, முதலியார், குலசபா நாதன் என்போர் நடாத்திவைத்தனர். மூவரும் மூன்று சிறந்த சொற்பொழிவுகளையும் ஆற்றினர்.

இதுவரை இலங்கையில் எப்போதும் நடை பெற்றிராத சிறப்புடன் புத்தகக் கண்காட்சியும் எழுத்தாளர் புகைப்படக் கண்காட்சியும் விளங்கின என்று எல்லோரும் பாராட்டினர். புத்தகக் கண்காட்சியில் ஏறக்குறைய 800 புத்தகங்களும் 125 சஞ்சிகைகளும் இடம் பெற்றிருந்தன. இலங்கையில் வெளியான மிகப் பழைய நூல்களுடன் நேற்று வெளியான சஞ்சிகைகள் புத்தகங்களும் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

புகைப்படக் கண் காட்சியில் இலங்கையின் பிரபல எழுத்தாளர்களுடன் ,பிரபலம் அமைந்துவரும் புதிய எழுத்தாளர் படங்களும் இடம் பெற்றிருந்தன ஏறக்குறைய 125 படங்களுக்குமேல் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

புத்தகக் கண்காட்சியை திரு. பி. ராமனுதனும் புகைப்படக் கண்காட்சியை திரு. எஸ். கணேசலிங்கனும் ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுடைய உழைப்பை மகாநாட்டிற்குச் சமுகமளித்த பெரியோரெல்லாரும் மனதாரப் பாராட்டினர்.

"புதுமை இலக்கிய மலர்" இலங்கையில் இதுவரை செய்யப்பட்ட இலக்கிய முயற்சிகளைச் சாங்கோபாங்கமாக விவரிக்கும் ஒரு தொகை நூலாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. இதை வெளியிட்டுப் பேசிய முதலியார் குல சபாநாதன் அவர்கள் "இம்மலர் இலங்கையின் எழுத்துலகப் பெருமையை உலகறியச் செய்யுமென்றும், ஈழத்துக்குப் பெருமை தரும்" என்றும் குறிப்பிட்டார்.

மகாநாட்டின் வரவேற்புரையை திரு கே. சிவத்தம்பி நிகழ்த்திஞர். முதலாம் நாள் விழாவின் முக்கிய அம்சமாக விளங்கியது மூதறிஞர் பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், சிங்கள—தமிழ் அறிஞர் வண. ஹிஸ் ஸெல்லே தர்மரத்தின தேரர் அவர்களையும் மகாநாடு பரிசளித்துக் கௌரவித்தமையாகும்.

இப் பெரியார்களுக்குரிய பரிசுகளை முறையே கலாநிதி கே. கணபதிப்பிள்ளை அவர்களும் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களும் வழங்கினுர்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தேக நலனின்மையால் மகாநாட்டிற்குச் சமுக மளிக்கவில்லை யாயினும், தமது நன்மாணுக்கர் திரு. கனக செந்திநாதன் அவர்களைத்தமது பிரதிநிதியாக அனுப்பியிருந்தார். அத்துடன் மகாநாட்டுக்கு ஒரு அரிய செய்தியையும் பண்டிதமணி திரு. செந்திநாதன் மூலமாக அனுப்பியிருந்தார். பண்டிதமணிக்கு அளிக்கப்பட்ட பரிசை திரு. செந்திநாதனே அன்னவர் சார்பில் கை ஏற்ருர். வண. தர்மரத்

தினதேரர் தமது நன்றியுரையைத் தமிழில் நிகழ்த்தி சபையில் பெரிய காகோஷத்தைப் பெற்ருர். முதல் நாள் விழாவிற்கு இலங்கையின் பிரபல சிறுகதை எழுத்தாளரான சி.வைத்தியலிங்கம் அவர்கள் தலைமை தாங்கித் தமது தலைமைப்பேருரையை நிகழ்த்தினுர். இதில் அவர்பல இலக்கிய பிரச்சினைகளைப் பற்றித் தமது கருத்துகளை வெளியிட்டதோடு, இலக்கியத்தின் நோக்கத்தையும் பற்றித் தமது எண்ணங்களை வெளியிட்டார்.

இக்கட்டத்தில் சிங்கள எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகளாக திரு. தர்மசிரி ஜயக்கொடி, திரு. பெரமுனத்திலக என்பவர்களும் பேசினர்.

முதலாம் நாள் நிகழ்ச்சிகளைப் பற்றி விபரித்த பத்திரிகைகள் இத்தமிழ் எழுத்தாளர் மகாநாடு சிங்கள தமிழ் எழுத்தாளர். ஒற்றுமைக்கு வித்திட்டுள்ள தென்று பாராட்டின.

அன்றைய நிகழ்ச்சிகளின் முடிவில் சினிமாப் படங்கள் காட்டப்பட்டன. தாகூர், ஷெக்ஸ்பீயர், மாக்சிம் கோர்க்கி என்ற மூன்று உலக எழுத்தாளர் களின் வாழ்க்கை பற்றிய இப்படங்களை ஏராள மான பேர் பார்த்து மகிழ்ந்தனர்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் எழுத்தாளரின் சொந்த விஷயங்கள் பற்றி ஆலோசிக்கும் கூட்டத்துடன் ஆரம்பித்தது. இதற்குப் பொது மக்கள் அனுமதிக்கப் படவில்லை. இக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன. சங்கக் காரியதரிசி திரு. பிரேம்ஜி ஒரு விரிவான அறிக்கையை இக்கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

மகாநாட்டுக்கு வந்த எழுத்தாளர்களுக்கு மத்தியான உணவு அளிக்கும் பொறுப்பை திரு. எஸ். குருசாமி ஏற்றிருந்தார். அவர் அளித்த அறுசுவை விருந்தைப் பலரும் பாராட்டினுர்கள்.

பிற்பகல் திரு. கே. கைலாசபதி தலைமையில் "இலக்கியம் எதற்காக?" என்ற விஷயம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. திருவாளர்கள் வ. அ. இராசரத்தினம், சோ. நடராசன், மு. கார்த்திகேசன், வி. ஏ. கந்தசாமி, எஸ். சரவணபவன், (சில்பி) மு. கணபதிப்பிள்ளை, கே. டானியல், ஈழத்து இரத்தினம், கனக செந்துநாதன் ஆகியோர், கருத்தரால்கில் பங்குபற்றினர். கருத்தரங்கின் அமைபாளர் அ. ந. கந்தசாமி பங்கு பற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினுர்.

அதன்பிறகு நவாலியூர் சோ. நடராசன் தலைமையில் "மானிலம் வளமுற" என்ற தலைப்பில் ஒரு கவியரங்கு நடைபெற்றது. இதில் "திமிலைத் துமிலன்", முருகையன், நாவற்குழி நடராஜன், மகாகவி, நீலாவணன், இராஜ பாரதி, புரட்சிக்க மால், அல்வாயூர் செல்லையா என்போர் கவிய முதம் வழங்கினுர். கவியரங்கின் அமைப்பாளர் சில்லையூர் செல்வராஜன் கவிஞர்களுக்கு கவிதையிலேயே நன்றியுரை தெரிவித்துக் கொண்டார்.

இரவு ஒரு கவிதை நாடகமும் வசன நாடகமும் நடைபெற்றன. திரு. முருகையன் எழுதிய கவிதை நாடகமான "குற்றம் குற்றமே" என்ற நாடகத்தை கொழும்பு கலைப் பெருமன்றத்தினர் நாடகமாக்கி அளித்தனர். சில்லையூர் செல்வராசன், லடிஸ் வீர மணி, திரு. சுந்தரலிங்கம் என்போர் முற்றிலும் கவிதையாலான இந்நாடகத்தில் மிகவும் சிறப்பாக நடித்தார்கள்.

"குற்றம் குற்றமே" என்ற ஹஸ்ய நாடகத்தை ராஜ் கலா மன்றத்தினர் தயாரித்தளித்தனர். இதில் திரு. ராஜரத்தினம், திரு. சிவத்தம்பி, திரு. மு. திருநாவுக்கரசு என்போர் சிறப்புற நடித்தார்கள்.

இவ்விரு நாடகங்களும் இவ்விரண்டு நாள் எழுத்தாளர் மகாநாட்டுக்கு மிகவும் சிறந்த முத்தாய்ப்பாக அமைந்தன.

---

## சுன்னுகம் செல்லாச்சி . . . .

(22 ம் பக்கத் தொடர்ச்சி)

சாப்பிடும்படி கொடுத்தார். அத்துடன் நோய் தீர்ந்தது. இப்படி நோய் நீங்கியவர் சுகாதாரப் பகுதியில் கடமையாற்றி வருகிருர். **இத்தகைய பெரியார் 1929 ம் ஆண்டு தை மாதம் அசுவினி நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார்.** ஒரு சாரார் இவரைச் சமாதி வைக்கவேண்டுமென்று விரும்பினர். யோகர் சுவாமிகள் பல காரணங்களை எடுத்துக்காட்டித் தகனஞ் செய்வதே முறையென்று கூறினர். அவர் விருப்பத்தின்படி அம்மையாரின் உடல் தகனஞ் செய்யப்பட்டது.

அம்மையாரின் குருபூசைத்தினமாகிய புண்ணிய தினத்தில் அம்மையாரின் பரிசுத்த வாழ்க்கையை நினைவில் வைத்து அதனுல்பெறக் கூடிய பயனை நாம் பெறுவோமாக.

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுத்தாள உலகிற்கு விடுத்த செய்தி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கொழும்பில் நடந்த எழுத்தாளர் பேரவையையொட்டி எழுத்தாள உலகிற்கு விடுத்த செய்தி

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்

எண் என்பதற்கு எண்ணம் என்று பொருள் கொள்வது தகுதி. எண்ணங்களைத் தூய்மைசெய் வதே முதலிற் கடைப்பிடிக்க வேண்டியது. மனத் துக்கண் மாசிலனுதல் அனைத்தறன் என்ற வள்ளு வர் வாக்கு ஈண்டுச் சிந்தனைக்குரியது.

தூய எண்ணங்களைப்பல்வேறு முகமாக ஆராய் ந்தது தொல்காப்பியப்பொருளதிகாரம் எண் ணங்களின் மரபு பிறழ்ந்து விட்டது என்ற குரலும் இருபது நூறு வருடங்களுக்கு முன்னமே எழுந் துள்ளது.

நாட்டுக்கு நலந்தரும் விளைவுகளுள் தலை சிறந்த விளைவு தூய எண்ணத்தின் விளைவு. இவ் வாறே நாட்டுக்கு தீது செய்யும் விளைவுகளுள் தலை சிறந்தது தூய்மையற்ற எண்ணங்களின் விளைவு.

நல்விளைவே நமக்கு வேண்டுவது, அவ்விளைவுக் குரிய நிலமும் காலமும் பேண வேண்டியவை.

நல்லதொரு காலத்தில் நன்னிலத்தில் விளைந்த நல்லெண்ண விளைவு முதலிற் பேச்சிலும் பேசிப் பேசி முதிர்ந்து கனிந்த பிறகு எழுத்திலும் வரு வதே முறை.

தலையைத் தொட்டு எழுத்து இப்படி என்று சொல்லுவதிலிருந்தே எழுத்தின் அமரத்துவம் இனிது விளங்கும். இதுவே ஆசிசெய்யும் முகமாக எழுத்தாளர் உலகுக்கு எழுதும் எழுத்து.

---

# ஸ்ரீலங்கா மதிப்புரை

ருவ் சாகிப். நல். முருகேச முதலியார் (சென்னைத் தமிழ்க் கலாச்சார மன்ற உதவித்தலைவர்) அவர் கள் கருத்து:—

இலங்கை அரசாங்க சமாச் சாரத் துறையினரால் வெளியிடப்படும் "ஸ்ரீ லங்கா" என்ற திங்கள் வெளியீட்டின் சில இதழ்களை நான் படித்து இன் புற்றேன். இந்த வெளியீட்டில் அரசாங்க செய்திகள் மட்டுமல்லாமல் கலை, இலக்கியம், கோயில்கள்,புகழ் பெற்ற பெரியோர்கள், இவைகளைப்பற்றிய கட்டுரை களும, அடங்கியுள்ளன. இவைகள் நாட்டுப்பற்றை யும், கலாச்சாரத்தையும், சமரசத்தையும் வளர்க்கு மென்பதில் ஐயமில்லை. எந்த நாட்டார்களானுலும் சரி, கூட்டத்தாரானுலும் சரி பரந்த நோக்கமும், நட்புப் பான்மையும், கொடுத்தலும் கொள்ளலும் என்ற அன்பின் அடிப்படையும் இல்லாவிடில் இன்பமாக வாழ முடியாது. இலங்கையின் பழைய வரலாறும் தொன்மை வாய்ந்த பண்பாடுகளும் கீழ் ஆசிய நாட்டிலுள்ள யாவரானும் போற்றத்தக்கன.

இந்த வெளியீடு நல்ல தமிழில் எழுதப்பட்டுள் ளது மிக்க மகிழ்ச்சிக்குரியது. கடினமான தமிழும், தற்கால பத்திரிகை நடையுமின்றி தூய தமிழாய் காணப்படுகிறது. எழுத்துக்களும், படங்களும் எழில் மிகுந்தமையாய் உள்ளன. கட்டுரைகளின் தேர்ந் தெடுக்கப்பட்ட பொருள்கள் பத்திரிகை ஆசிரியரின் ஆற்றலைத் தெற்றென அறிவிக்கிறது. ஏனெனில் பொதுவாக அரசாங்க வெளியீடுகளில் பெரும் பாலும் அமைச்சர்களைப்பற்றிய செயதிகளே காண ப்படும் இந்தப் பத்திரிகையில் இலங்கை அரசாங்கத் தின் க்ஷேமநல ஏற்பாடுகளை சுருக்கமாகவும், கவர்ச்சிகரமாகவும் எழுதப்பட்டுள்ளன. இலங்கை யைப்பற்றி அறியவிரும்பும் தமிழறிந்த மக்கள் எங்கிருந்தாலும் இதைப்படித்து நலமடைவார்கள் என்பது என்கருத்து. இப்பத்திரிகை நல்லதோர் நட்பு தூதனுகும். அது ஓங்கி வளம் பெறுக !

நல். முருகேசமுதலியார்,

# வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்

ஆக்கியோன் : வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்

பதிப்பு : திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

விலை : ரூபா 2.50

நாட்டுப் பாடல்கள் பற்றி அநேக துண்டுப் பிரசுரங்களையும் நூல்களையும் வெளியிட்டுவரும் திரு. மு. இராமலிங்கம் அவர்கள் இப்பொழுது "வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்" எனும் நூலினை வெளியிட்டுள்ளார்கள். திரு. இராமலிங்கம் அவர்கள் நாட்டுப் பாடல்களைச் சேகரிப்பதில் தம் வாழ்நாள் முழுவதையும் பயன்படுத்திவிருக்கின்ருர்கள் என்பது யாவரும் நன்கறிந்த உண்மையாகும். அவர்களுடைய அயரா உழைப்பினுல் காற்றிலே மிதந்து திரிந்த பாடல்கள் நூலுருவில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இந்நூலுக்கு முன்னுள் கணக்குப் பரிசோதனை அதிபர் திரு. க. கனகரத்தினம் அவர்கள் ஆங்கிலத்தில் சிறப்புரை வழங்கியிருக்கின்ருர்கள். திரு. இராமலிங்கம் அவர்கள் ஆற்றிவரும் சேவையைத் தமிழரல்லாதாரும் அறிந்து கொள்ளும் வகையில் இச்சிறப்புரை ஆங்கிலத்தில் அமைந்திருப்பது மிகப் பொருத்தமானதாகும்.

இந்நூல் உருவாதற்குத் தமக்கு உதவிபுரிந்த அன்பர்களுக்கு நன்றிகூறும்முகமாக திரு. இராமலிங்கம் அவர்கள் நன்றியுரை எழுதியுள்ளார்கள். இந்நூலகத்தே,

1. நாட்டார் பாடல்கள்
2. தாலாட்டுப் பாடல்கள்
3. ஒப்பாரிகள்
4. வயல் வேலைகளோடு தொடர்புடைய பாடல்கள்
5. கொடும்பாவிப் பாடல்கள்
6. மணமக்களும் குடிமக்களும்
7. பிரிவாற்ருமை
8. கப்பற் பாடல்கள்
9. நெல்குற்றுப் பாடல்கள்

என ஒன்பது பகுதிகள் உண்டு.

நாட்டார் பாடல்கள் என்ருல் என்ன என்பது பற்றி இக்காலத்தில் நிலவிவரும் பிழையான கருத்துக்களை அலசி ஆராய்ந்து, தெளிவான கருத்தை நாட்டார் பாடல்கள் எனும் பகுதியில் திரு. இராமலிங்கம் அவர்கள் கூறியிருப்பது பாராட்டத்தக்கது.

"நாட்டார் பாடலை யார் பாடினுர் ? என்று எவராவது ஒரு வினு எழுப்பினுல், நீங்கள் இலேசாய் விடைகூறி விடலாம். கல்வியில்லாத கன்னியர்கள், மங்கையர்கள், தாய்மார்கள், தொழிலாளர்கள் என்னும் இன்னேரன்னவர்களில் எவரேனும் நாட்டார் பாடல்களைப் பாடிவிடலாம். இனி அவர்கள் எப்படிப் பாடினுர்கள்? சிரிப்பு வரக்கூடிய உணர்ச்சியானது ஒருவன் ஒருத்தியின் உள்ளத்தில் எழும்போது ஹாஸ்யப் பாடல் உயதமாகும். இவ்வாறே அழுகை அடங்காமல் எழும்போது ஒப்பாரிப் பாடல் உதயமாகும். உவகை ஓடும் போது காதலரிடையே காதற் பாடல் உயதமாகும். எவரையேனும் பழிக்கும்போதும் எதனையேனும் கண்டு அஞ்சும் போதும், எதனையேனும் அதிசயப்படும்போதும் எவரோடேனும் கோபிக்கும் போதும், அந்த அந்தச் சுவைப்பாடல் உதயமாகும்.

இப்பாடல்களில் புலமையோ, கவித்திறனே, காண்பதற்கில்லை. எனினும் இத்தகைய பாடல்களில் உணர்ச்சி உண்டு. ஓசை உண்டு ; இன்பம் உண்டு. இயற்கை மணம் உண்டு. சுருங்கச் சொல்லின் ஜீவன் உண்டு.

"மட்டக்களப்புக் கிராமங்களில் நிலவு பொழியும் இரவு வேளையில் கிராம மக்களுக்கு உற்சாகம் பிறந்துவிட்டால், அவர்கள் வாக்கினின்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாக **கவிகள்** உருவாகின்றன. மட்டக்களப்பு நாட்டார் பாடல்களில், முதல் ஸ்தானம் வகிப்பது **கவி** ஆகும்."

இவ்வாறு குறை இருத்தல், சோடிக் கவிகள் முதலியவற்றின் வேறுபாடுகளை விளக்கியுள்ளார் திரு. இராமலிங்கம் அவர்கள். இறுதியாக அவர் நம்மிடத்தே காணப்படும் குறையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

(28 ம் பக்கம் பார்க்க)

# புத்தக மதிப்புரை

## தங்கத் தாத்தா

ஆசிரியர் : " தமிழ்மணி " தெல்லியூர்

தமிழ்மணிப் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

உரிமையாளர் : தெல்லியூர் செ. ந. கனகவேல் ராசா வேலகம் ", 11/1, குமாரசாமி வீதி. யாழ்ப்பாணம்.

விலை 50 சதம்.

நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினை இரத்தினச் சுருக்க மாகத் தருவது இந்நூல். இந்நூலாசிரியர் புலவர் அவர்கள் இல்லத்துக்கு யாத்திரை செய்து அவர்களை முதன் முதலாகத் தரிசித்த நிகழ்ச்சியை உள்ளத்துடிப் புடன் இளைஞருக்கேற்ற மொழியில் சொல்லோவிய மாகத் தீட்டியுள்ளார்.

" பொன்னையுருக்கி வார்த்த செம்பொன் மேனி யும் வெள்ளிக்கம்பிக்கயிற்றை போன்ற சிறு வெண் தாடியும், தொட்டு முறுக்கிய மீசையும், புன்முறுவல் பூத்தமுகமும் அறிவொளி ததும்பும் கூரிய கண்க ளும், கள்ளங்கபடு அற்ற குழந்தையுள்ளமும் அன் புகுழைய அள்ளி அள்ளிச் சொரியும் இனிய வார்த் தைகளும், சாந்த சொரூபமும் கொண்ட புலவர் " பிரான் " என இந்நூலாசிரியர் சோம சுந்தரப் புலவர் அவர்களின் தோற்றத்தை வர்ணித் துள்ளார். புலவர் அவர்களின் வாழ்க்கையினை, பிறப்பும் கல்வியும், ஆசிரியத் தொழில், இல்லற மும் தொண்டும், புகளுடம்பு பெற்றுர் என நான்கு பகுதிகளாக வகுத்து பக்தியுடன் எழுதியுள்ளார்.

தங்கத்தாத்தாபாடிய நாமகள் திருப்பள்ளி யெழு ச்சி நாமகள் ஆசைப்பத்து நாமகள் ஆசிரிய விருத்தம் நாமகள் அலங்காரம் செந்தமிழ்ச் செல்வி, இந்து சாதன வச்சிர விழா வாழ்த்து ஆகிய கவிகள் இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. தங் கத்தாத்தாவின் அழகிய படமும் இந்நூலில் முதற் கண்சேர்க்கப்பட்டுளது. ஈழநாட்டு இளைஞர்கள் தங் கத்தாத்தாவின் கவியமுதத்தைப் பருக வழிகாட்டும் முறையில் இச்சிறுநூல் அமைந்துள்ளது. அழகிய வர்ண அட்டையுடன் கூடிய இந்நூலினை இளை ஞர்கள் படித்தின்புறும் முறையில் நல்ல தமிழில் எழுதிய தெல்லியூர் நடராசன் அவர்கள் தொண்டு பாராட்டுதற்குரியது.

## குருளை மந்தை

குருளை மந்தை அமைப்பு

ஆசிரியர் : " தமிழ்மணி " தெல்லியூர்

உரிமை : தெல்லியூர் சொ. கனகவேல்ராசா தமிழ் மணிப் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

விலை : 20 சதம்.

இளைஞருக்கு நற்குடிமுறையைப் பயிற்றுவதற்குச் சிறந்த இயக்கம் சாரணீயமாகும். இவ்வியக்கம் உலகில் பல நாடுகளிலும் பரவிவருவது கண்கூடு. ஆங்கிலத்தில் அநேக நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனல் தமிழில் இத்தகைய நூல்கள் கிடையா வென்றுதான் சொல்ல வேண்டும். எனவே சாரணீய இயக்கத்தின் முதற்படியான ஓநாய்க் குருளைகளுக்கு ( **Wolf Cubs** ) ஏற்ற நூலொன் றின் " குருளை மந்தை அமைப்பு " எனும் பெயரு டன் தமிழில் வெளியிட்ட ஆசிரியர் தெல்லியூர் அவர்களை தாய்நாடும் சேய்நாடும் பாராட்டாதிருக்க முடியாது. இந்நூல் மொழிபெயர்ப்புநூல் போல தேர் வடத் தமிழில் எழுதப்படவில்லை. சிறுவர் கள் சிரிப்புடன் வாசித்து இரசிக்கும் முறையில் ஆசிரியர் எழுதியுள்ளார். மேலும் சாரணிய இயக் கத்தை எழுதுவதற்கேற்ற சொற்களும் சொற்றெ டர்களும் தமிழில் வழக்காற்றில் இல்லை. எனவே இந்நூலாசிரியர் புதிய சொற்களை ஆக்கி யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய இலகுவான நடையில் இந்நூலை ஆக்கியிருப்பது சிறந்த தொண்டாகும் இந்நூலகத்தே. முதற்படி மந்தையை ஆரம்பிக்கு முன்னர் மந்தையை ஆரம்பித்தல், சிறு வளுகத் திரட்டுதல் பெற்றேர், படைக் கோலம் பயிற்சியும் நிகழ்ச்சித்திட்டங்களும், ஒழுக்க முறை, அறுவர், பஞ்சாயத்து, உயர்ச்சி என்ற பிரிவுகளில் குருளை மந்தை அமைப்பு விளக்கப்பட்டுளது. ஓநாய்க் குருளைகளாகச் சேரும் இளைஞர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிந்துப்பயன் பெறவேண்டிய நூல் இது என்பதிற் சந்தேகமில்லை.

**ஆயுள்வேத புற்றுநோய் நிபுணர்**

ஆசிரியர் : செ. தெல்லியூர்.

உரிமை : தெல்லியூர் செ. ந. கனகேஸ்வரா, 11/1, 11/1, குமாரசுவாமி வீதி, இலவச வெளியீடு யாழ்ப்பாணம்.

ஆயுள்வேத வைத்தியத்துறையில் அரியசாதனை காட்டிவாழும் வைத்தியசிகாமணி திரு நிறை பொ. செல்லையா அவர்கள் புற்று நோயின் மாற்றி வரும் அற்புதத்தைத் திரு. தெல்லியூர் இந்நூலில் விளக்கிக்காட்டியுள்ளார். வைதிய சிகா மணி திரு. நிறை பொ. செல்லையா அவர்களின் வாழ்க்கை வரலாறும், அவருக்குக் கிடைத்த நற்சாட் சிப்பத்திரங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

புற்று நோய் பற்றிய விவரமும் இதன் கண்கூறப் பட்டுளது. இது இலவச வெளியீடாக வழங்கப்படு கின்றது.

**ஒநாய்க் குருளை**

ஆசிரியர் : " தமிழ்மணி " தெல்லியூர்

உரிமை : தெல்லியூர் செ. ந. கனகவேல்ராசா தமிழ்மணிப் பதிப்பகம் யாழ்ப்பாணம்

விலை : 20 சதம்.

சாரணர்படையின் ஓர் பகுதியினரான ஒநாய்க் குருளைகள் என்பவர்கள் யார் என்பதையும், அவர் களுக்குரிய பிரமாணம், கடமைபுரிதல், விதிகளுக்க மைதல், நற்பணி. ஆகியவற்றையும், இலகுவான தமிழில் விளக்குவது இந்நூல். இந்நூலும் சாரணீயச் சிறுவருக்குப் பெரிதும் பயன்படும் முறை யில் ஆசிரியர் தெல்லியூர் அவர்களால் எழுதப்பெற் றுளது. இத்துறையில் நுல்கள் தமிழில் இல்லாத பெருங்குறையை இந்நூலாசிரியர் நிறைவுசெய்து வருவதால், அவர்களுக்குச் சாரணீயர் உலகமும். தமிழுலகமும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையன.

**பூரண குருளையாகும் வழி.**

ஆசிரியர் : " தமிழ்மணி " தெல்லியூர்.

உரிமை : தெல்லியூர் செ. ந. கனகவேல்ராசப தமிழ்மணிப் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

விலை : 25 சதம்.

பூரண குருளையாகும் வழியினை இந்நூல் விளக்கத் தொடங்கி, படைக்கோலம், படை அமைப்பு, ஒநாய்க்குருளை மந்தைகள், குலக்கோல், இளஞ் சுவடன் பரீட்சைகள், ஒருகண்குருளை, ஒருகண்குருளை பரீட்சை, இரு கண்குருளை பரீட்சை, விசேட தேர்ச்சிச் சின்னங்கள் என்னும் தலையங்கங்களின் கீழ் விவ ரித்துக்கூறுகின்றது. இளைஞர் சாரணீயத்துக்கு ஒரு கைந்நூல்போல உதவும்வகையில் அமைந் துள்ளது. படிப்பதற்கு அலுப்புத்தட்டாத முறையில், நல்லதமிழில் சிறப்பாக, எழுதப்பட்டுளது இந்நூல். இத்துறையில் நூலா சிரியர் ஆற்றிவரும் அருந் தொண்டு பாராட்டுதற்குரியது.

---

## வட இலங்கையர் . . .

(26 ம் பக்கத் தொடர்ச்சி)

" எத்தனையோ வகையான பாடல்கள் தமிழ் நாட்டில் உலவுகின்றன. வயலில் உழுகின்றவர் கள், நாற்று நடுகிறவர்கள் அரிவி வெட்டு கின்றவர்கள் கிணறு வெட்டுகிறவர்கள், தண்ணீர் இறைக்கிறவர்கள் மீன் பிடிக்கிறவர்கள் ஓடம் விடுகிறவர்கள், வண்டி ஓட்டுபவர்கள், ஏனைய தொழில் மாந்தர்கள், குழந்தைகளைத் தாலாட் டுப்பவர்கள், சோறூட்டுபவர்கள், நிலாக் காட்டு பவர்கள், கிளியோட்டுபவர்கள், விளையாடுபவர்கள், இழவு வினவுபவர்கள் பாடும் பாடல்களை " யெல்லாம் தொகுத்து வகைப்படுத்தி வெளியிடு வதில் நாம் இன்னும் சிரத்தை கொள்ளவில்லை. நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் இத்தருணத்தை நாம் கைத்தவற விடக்கூடாது ".

இந்நூலினை அதன் பொருட் சிறப்புக்கேற்ற முறையில் திருமகள் அழுத்தகம் கவின் பெற அச்சிட்டுளது.

திரு. இராமலிங்கம் அவர்கள் நாட்டுப் பாடல் களுக்காகச் செய்துவரும் அரும்பணியைப் பற்றிப் பல முறை ஸ்ரீலங்காவில் எழுதியிருக்கிறோம். இவ ருடைய பணியைப்பற்றி சுதந்திரன் முன்னாள் பத்தி ராதிபர் திரு. எஸ். டி. சிவநாயகம் இந்நூலின் கண் கூறியிருப்பதை எடுத்துக் காட்ட விரும்பு கின்றோம்.

" வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் தமது வாழ் நாளைக் கிராமிய இலக்கிய வளர்ச்சியில் அர்ப்பணித் திருக்கின்றார். நாட்டுப் பாடல்கள் என்றால் அவ ருக்கு உயிர். ஒரு நாட்டுப் பாடலைத் தேடிப் பெறு வதற்காகக் காட்டுப் பாதையில் பல கல்தூரம் கால்நடையாக நடக்கவும் தயாராய் இருக்கும் உளப்பாங்கு அவருடையது. இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக உதிர்ந்து கிடக்கும் பவழ மல்லிகை மலர்போன்ற நாட்டுப் பாடல்களைப் பொறுக்கிச் சேர்த்துச் செப்பனிட்டு அவற்றினூடே கற்பனை யென்னும் நாரைப் புகுத்தி அற்புதமான ஆரம்படைத்துத் தமிழணங்கின் பாதத்திற் பயனை எதிர்பாராது சமர்ப்பித்துக் களிக்கும் திருப்பணியில் அவர் ஈடுபட்டிருக்கிறார் ".

திரு. இராமலிங்கம் அவர்களின் நூல்களைத் தமிழ் மக்கள் விலை கொடுத்து வாங்கி அவருக்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்பது அவர்களின் தலைசிறந்த கடனாகும்.

# ஆதித் தமிழகம்

மூலம் : திரு. எஸ். ஆர். முத்துக்குமாரு அவர்கள்

தமிழாக்கம் : வண்ணை திரு. வை. இராமநாதன் அவர்கள்

ஆதியிலே தமிழர்கள் தோற்றி வசித்த இடம் "இதுவெனல்" இன்னும் நிச்சயிக்க முடியாத தடுமாற்றப் பிரச்சினையாகவிருக்கின்றது. இந்த மறை பொருளை யறிவதற்காகப் பிரயத்தனங்கள் மேல் நாட்டிலும் கீழ்நாட்டிலுமுள்ள மேதாவிகளினுற் செய்யப்பட்டன. ஆனுல், இப்போது காணப்படும் நிலைமையளவில், எவ்விதமான நற்பயனும் உண்டாகவில்லை. இந்தியாவுக்கு அப்பாலுள்ள எந்த இடத்திலேனும், தமிழரின் ஆதியகம் இருந்திருக்கலாமென்டதைத் தேசாபிமானமும் ஊர்சித சிந்தையுமுள்ள எந்த இந்துவும் ஒப்புக்கொள்ளமாட்டான். இஃதேபோல், தேசாபி மானமும், ஊர்சித சிந்தையுமுள்ள எந்த ஐரோப்பிய வித்தியார்த்தியும், இவ்வகத்தை, தைக்கிறிஸ் நதிக்கும், யூபிறேற்றீஸ் நதிக்கு மிடையேயுள்ள பள்ளத்தாக்கிலேயே காட்ட முய லுவன்.

பரதகண்டத்திலே காணப்படும் எப்பொருளும் அவ்விடத்திலேயே உற்பத்தியுடையனவென்பதை தமது முன்னேரின் நம்பிக்கையென்று கீழ் நாட்டு வித்தியார்த்தி கூறுகின்ருன். மேனுட்டு மேதாவிகளோ, இந்த நம்பிக்கை இப்படியிருந்த போதினும், பாஷைகளைப்பற்றிய ஆராய்ச்சியின் பெறு பேருக, எல்லாச் சாதியாளரையும் அவரவர்கள் எவ்வெவ்விடத்திலுற்பத்தியானவர்கள் என்பதை நிச்சயமாகக் கூறிவிடலாம் என நிலைநாட்டு கின்றனர். சரித்திர நூல்கள், எட்டாமல் நின்று விட, இது காரணமாகப் பெறக்கூடிய சாட்சிகள் அற்றுப்போக, இங்கு, பாஷையும் அதைப்பற்றிய சரித்திர ஆராய்ச்சியுமே சரித்திர காலத்திற்கு முற்பட்ட சம்பவங்களைப் பற்றி நாம் அறியக் கூடியதான வழிவகைகளை எமக்கு உதவுகின்றன. இதைக்கொண்டே, ஒரு சாதியாளர் சரித்திர காலத்தின் முன்னிருந்த வகையையும், அவர்கள் எந்த மத்திய ஸ்தானத்திலிருந்து பிரிந்து வேறு இடங்களுக்குப் பரவினுர்களோ, அந்த மத்திய ஸ்தானமிதுதானென்பதையும், நாம் தேடிக் காணக்கூடியதாகின்றது. சப்தவிற்பத்தி யாகும் சொல்லிலக்கனம் இதுவிஷயத்தில் நிச்சய மான துறையாகக் காணப்படவில்லை யென்டதைச் சொல்லவே வேண்டியதில்லை.

கடந்த நூற்ருண்டிலே தமிழரின் ஆதியகத் தைப் பற்றிப் பாஷைத் தொடர்பைக் குறித்து பல வேறு வகையான கொள்கைகள் வெளிப் பட்டன. இக்கொள்கைகளிற் பல, கால வரை யறையின்பாற்பட்ட சோதனைகட்கு நின்றுபிடிக்க முடியாதனவாகவே அவை தீர்க்கமாக ஒதுக்கி வைக்கப்பட்டன. இன்னும் இவற்றுட் சில ஆராயப் பெறுகின்றன. சரித்திர முடிவானவும், வித்தியாசம்பந்தமானவும் சாட்சிகள் மிக அருகி விட்டமையால், சப்தவிற்பத்தி சாஸ்திரம், புராதன கலாஞான சாஸ்திரம், மனிதத்துவ ஞான சாஸ்திரம் ஆகிய சாஸ்திரங்களையே யாராயத் தொடங் குவராயினர்.

இவ்வழியில் அதிகம் வேலையாகிவிட்டது ; என் ருலும், பண்டைத் தமிழ்மக்களின் சாதி சம்பந்த மானவும் பாஷா சம்பந்தமானவும் ஒற்றுமைப்பாடு களை யாராய்ந்து அறியும் வகையில் இன்னும்பெரும் பகுதியான உழைப்பு நடைபெறவேண்டியதொன் ருகும். மெல்லமெல்ல அடிவானம் வெளிப்படை கின்றது. இன்னும் சில பத்தாட்டைக் காலத்துள், பண்டிதர்கள் இதுவிஷயமாக ஒரு தீர்க்கமுள்ள முடிவைக் காணக்கூடும் போலும். இப்படி யாகும் வரையில், பக்குவம் படைத்துள்ளவை களான ஐதீகங்கள் சிலவற்றை அவைகள் எமது கரிசனையான கவனத்திற்குப் பாத்தியதை யுடையனவாகையால்—கூறி, இவற்றை வாசிப் போர் தங்கள் தங்கள் சொந்தத் தீர்மானங்களைச் செய்துகொள்ள விடுவதே புத்தியின்பாற்பட்டதாகு மென நான் நினைக்கின்றேன்.

### 1. ஸ்கிதியன் ஐதீகம்.—(The Scythian Theory)

இவ்வைதீகம் முதலாவதாக பேராசிரியர் ருஸ்க் அவர்களினுல் வெளிப்படுத்தப் பெற்றுப் பின்பு கனம் கால்ட்வெல் குருவினுல் அலங்கரிக்கப் பெற்றதாகும். ஸ்கிதியின் பாஷையினதும், தமிழ்ப் பாஷையினதும் இலக்கண நூல்களையும் அக ராதிகளையும், பாண்டித்தியம் படைத்த அக்குரு ஒப்பிட்டுப்பார்த்து, ரியூறேனியன் வர்க்கத்திலே யுள்ளதென எண்ணப்பட்ட ஸ்கிதியின் கணத்

திலே தமிழ்ச் சாதியும் பாஷையும் உள்ளதா மென ஒரு முடிவுக்கு வந்தனர். இவ்வைதீகம் சப்த உற்பத்திச் சாஸ்திர ரீதியாகவும், மனுஷ கண சாஸ்திரரீதியாகவும் ஆராய்ந்துழி எவ் வகையான பொருத்தமற்றதாகக் காணப்படுகின்ற தென விஞ்ஞான வாராச்சியாளர் இதைப் புறக்கணித்துவிட்டனர்.

சீ. ஈ. கோவர். என்பார் பின்வருமாறு கூறு கின்றனர். "டாக்டர் கால்ட்வெல்ட் உடைய பாண் டித்தியம் படைத்த நூலாகும்" திராவிட பாடைகளின் ஒப்பிலக்கணம் வெளிவந்ததின் பின்னர் தமிழர் முதலியோர் ரியூறேனியன் மக்களேயாவரென ஒப்புக்கொள்ளப்பட்டது. சப்த உற்பத்தி சாஸ்திர ஆராய்ச்சியின் விருத்தியும், பாஷைகட்கிலக்கணமெழுதப் புகுந்த பாண்டித் தியம் படைத்த ஜர்மன் நூலாசிரியர்கள் கையா ளும் புதுவழியான வியாகிருதிமுறையும் மேலே கூறப்பட்ட வகுப்பு முறையிலுள்ள பிழையைக் காட்டிவிட்டன.

பாரிஸ் நகரிலுள்ள ஜே. வின்சன் பேராசிரி யர் எழுதுகின்றார் "ரியூறேனியன் வர்க்க மொன்றுள்ளதென நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை யென்பதை ஈண்டு குறிப்பிடுவ துடன், இது நிகழ்ச்சியுண்மைகளாலும் அல்லது நியாயவாயிலாகவும் நிலைபெறப்பண்ணத்தக்க பிர திக்ஞையல்லவென்றும் மூடத்தனம் படைத்த தென்றும் சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

திராவிடர், ஸ்கிதியின் கணத்தின் புராதன வகுப்புக்குச் சேர்ந்தவர்களாகயிருக்கலாமென்றும் டக்டர் கால்ட்வெல்லின் அபிப்பிராயத்திற்கும் எவ் வகையான ஆதாரமும் இன்றும்.

**2. தீபெத்து–மங்கோலியன் ஐதிகம்.— Tibeto Mongolian Theory**

"1800 வருடங்கட்கு முன் உள்ள தமிழர்" என்னும் ஆராய்ச்சி உரையின் சிறந்த ஆக்கியோனு கும், திரு. கனகசபைப்பிள்ளை இந்த ஐதீகத்தின் தாதாவாகும். சேர். டபிள்யு. டபிள்யு. ஹன்ரரும் மிஸ்டர் மாஷமான் என்பாரும் இவ்வைதீகத்தின் மூதாதைகளாவர்.

தமிழருடைய நரம்புகளிலோடும் மங்கோலிய உதிரம் வங்காளத்திற் குடியேறிய மங்கோலிய ரினுலேற்பட்டது என்று சொல்லப்படுகின்றது. ழ, ஞ, ங என்னும் எழுத்துக்கள் தமிழிலும், தீபெத்திய மங்கோலியப் பாஷைகளிலிருப்பதும், தமிழ்ப்பாஷை க்கும் தமலறற்றிப் பாஷைக்கும் பொதுவாகவுள்ள சப்தநாத ஒப்புமையும் தமிழர் தீபெத்திய மங் கோலிய வருக்கத்திற்கு இனமுடையவர் என்ப தைச் சாதித்தற்கேதுவான நியாயங்களிற் பிர தானமானவைகளாம்.

திரு. கனகசபைப்பிள்ளை, கலித்தொகையில் 104 ம் பாடலாகிய அதில், "தென்னவன் றெல் லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத் தாயர்" என்னும் பாகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, இதனுல் தமிழரின் தொடக்கத்தை தீபேத்திய பிரதிக்ஞையிற் சேர்க்கப் பார்க்கிருர். இதைக்கொண்டு ஆயர் சாதியார் வடக்கிலிருந்து பாண்டியர்களுடன் வந்ததாக வியவகரிக்கின்ருர். மேலும் தென்னுட்டு **ஆயர்களை** வடநாட்டிலுள்ள நாகரீகமற்ற **அலி**வர்களுடன் சமப்படுத்துகின்ருர். ஆனுல், குறித்த பாடலின் பாகத்தின் தொடக் கத்திலுள்ள வரிகளை அவர் கவனித்தாரல்லர். அவைகள் இந்தப் பிரதிக்ஞைக்கு முற்றும் முரணுகவுள்ளன. அவை வருமாறு :—

**மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்**
**மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்**
**புலியொடு வின்னீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை**
**வலியினுல் வணங்கிய நாடாச்சீர்த்தென்னவன்.**

இதன் கருத்து—"தனது நாட்டைத் திரையூரும் கடல் கொண்டமையினுல், மங்காப் புகழும் பெல மும் படைத்த தென்னுட்டின் பாண்டியனை மேலே நோக்கிச் சென்று புலி (சோழன்) யையும், (சேரன்) வில்லையும் ஒதுக்கித்தள்ளி அந்நிய நாட்டிலே தனது புகழ்கொட மச்சக்கொடியை நாட்டினுன் என்பதாகும்.

மேலே கூறப்பட்ட பாடல், தெற்கிலே பெரிய கண்டமொன்றிருத்ததாகக் கூறப்படும் பாரம் பரியத்தை நேர்முகமாக அநுவதிப்பதுடன், கடல் கோட்பட்ட நிலத்திலிருந்து இந்த ஆயர்கள் பாண்டியனுடன் வந்தனர் என்பதையும் ஆதரிக் கின்றது.

**3. சுமேரிய–ஆக்கேடிய–இலாமையிற் ஐதிகம் (The Sumero–Accadian–Elamite Theory)**

இந்த ஐதீகத்தின்படி இந்திய நாடு, இரு கூட்டமான இலாமையிற் படையெடுப்புத் தாக்கங் களினுற் கைக்கொள்ளப்பட்டிருந்தது. ஒரு கூட்டத் தார் பேர்சியக் குடாக்கடல் வழியாகக் கடற் பக்கத்திஞல் வந்து இந்தியாவின் தென் மேற்குப் பாகத்தில் உறைந்தனர். மற்றக் கூட்டம் தரைமார்க்கமாகப் **பொலன்பாஸ்** வழியாக வந்து வடகீழ்ப் பாகத்திற் குடியேறினர். இந்த ஐதீகம்

**ஈழத்திற்கும்** இந்தியாவுக்கும் பொதுவான புராணக் கதையாயுள்ள சலப்பிரளயத்தையும் அவ்வழியிருந்த தெப்பத்தையும் அடிப்படையாகவுடையதேயாம். இன்னும் தமிழ்ப் பதங்கட்கும் ஆக்கேடியப் பதங்களுக்கும் பொதுவாகவுள்ள சப்த விற்பத்தி, குறியீட்டு நிலைமையாகியவற்றிற்கும்மேரு மலையிற் பொறிக்கப்பட்டிருப்பதாக உருவகப்படுத்தப்பட்ட சமஸ்கிருத **இளவிட்டம்** என்பதின் ஒற்றுமைப் பாட்டிற்குமுள்ள நியாயங்களும் இதற்காதாரமாகக் கொள்ளப்பட்டன. விவிலிய நூலிலே சொல்லப்பட்ட **எல்மொண்ட்** என்பதும் பாபிலோனியருடைய **ஈழமும்** ஒன்றேயாகும்.

தமிழருடைய ஆதியகம், ஒரு காலத்திலே உலகத்தின் சுவர்க்கமென அபிமானிக்கப்பெற்றதான **தைகிறிஸ்** நதிக்கும் **யூபிறேற்றஸ்** நதிக்குமிடையிலுள்ள வளம் பொருந்திய நிலமாகும் தென் ஆசியாப்பகுதியிலுள்ள பூப்பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. வடமேல்பாகத்தில் **சும்மர்** என்பதும் தென்கீழ்ப்பாகத்தில் **அக்கெட்** என்பதும் ஆம். தமிழிலே இல்லம் என்னும் கருத்தமையும் ஈழம் என்பது, **பாபிலோனியரின் ஆக்கேட்** என்பதற்கும் அங்குள்ள மலைக்கும் உள்ள மறுநாமமாகும். இதுவே தமிழரின் ஆதியகம் என்று அநுமானிக்கப்பட்டது. ஈழம் அல்லது ஈழவிட்டம் என்பதைப் புராணங்கள் இன்றும் பாராட்டுகின்றன. இலங்கை இன்றும் ஈழமண்டலம் என்று அழைக்கப்படுகின்றது.

ஒரு பக்கத்திற் தமிழரும் மறுபக்கத்தில் அக்கேடியரும் ஆக, இவர்களிருவருக்கும் பொதுவாகவுள்ள சமயக் கோட்பாடுகள் பாஷை ஆதியவற்றின் பெருபான்மையான ஒற்றுமைப்பாட்டினுல் இந்த ஐதீகத்திற்கு அதிகம் வலு வழங்கப்படுகின்றது. சமீபகாலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் வாயிலாக, மிகப் புராதனமான பாபிலோனிய சிலாசாசனங்கள் எழுதப்பெற்றுள்ள சுமேரிய பாஷையானது, தமிழ் எக்கணத்திற்குச் சேர்ந்ததோ அக்கணத்திற்கே சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. மேலும் வின்ஸ் சாதியார் பூர்விகத்திலுள்ள "சூ" வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் கொள்ளப்படுகின்றது. வேறு சில ஆதாரங்களின்படி **கஸ்றிறைற்ஸ** என்னும் சாதியார் **சுமேரியர்**களுடன் விவாகக் கலப்புச் செய்து **ஆக்கேடியர்களின்** ஆரம்பத்தையாக்கினர் எனப்படுகின்றது. ஆகவே, தற்காலத்திலே தென்னிந்தியாவில் வழங்கும் பாஷைகட்கும் சுமேரியப் பாஷைக்குமிடையேயுள்ள பொருத்தப்பாடும்,பழைய ஆக்கேடியர்கட்குள்ளே சாதாரண வழக்கமாயிருந்ததாக நன்கு அறியப்படும் பழக்க வழக்கங்கள் நெடுங்காலமாக இன்றுவரையும் தமிழருக்குள்ளே நடைமுறையிற் காணப்படுவதும், ஆதித் தமிழர் **சுமேரிய-கஸ்றிறைற்ஸ்** என்னும் புராதனச் சாதியாருடன் சாதியொற்றுமைப்பாடுடையவர்களாகும் என்னும் ஐதீகத்தை மிகப் பெலப்பாக நிலைநிறுத்துவனவாகக் காணப்படுகின்றன.

**பரத**ரென்று அழைக்கப்படுபவர்களும், நாட்டிற்குப் பாரதபூமி, பரதகண்டம், பாரத வருஷம் என்னும் பெயர்களுண்டாவதற்குக் காரணராயிருந்தவர்களுமான இந்தியாமீது படையெடுத்து வந்த, சரித்திரத்திற்கு முற்பட்ட சாதியாராகும் **ஈழவர்**, அருகிப்போன **சால்டிய-ஈழவ** சாதியாரின் ஒரு வகுப்பாராகும். இவர்கள் **ஆக்கேடிய-சால்டியா**விலிருந்து முறைமுறையாக இந்தியாவினுள் வந்து சேர்ந்தனர்.

சம்பாவிதமாக, மலையாளத்திலுள்ள **பர** என்றும் தமிழிலுள்ள **பார்** அல்லது **பரை** என்றும் உள்ள மலையைக் கருதும் சொற்களிலிருந்தே பாரத என்னும் பதன் உற்பத்திபெற்றிருக்கலாம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பூர்வீக அரசனுடைய நாட்டிலும் ஒரு மலையிருந்தமையும் அம்மலை அவ்வரசனின் அரணும் மனையுமாகவிருந்தமையும் மேலேகொண்டுள்ள கருத்திற்காதாரமாகவிருக்கின்றன. பிற்காலத்திலே "**ஹிந்துஸ்தான்**"த்திலே குடியேறிய பரதர்கட்கு **கந்தார்** என்னும் பெயரும் **தெக்ஷணத்தில்** வசித்தவர்கட்குத் **திராவிட**ரென்னும் பெயரும் கொடுபட்டன.

**சல்டியா**விலிருந்து பாரதர் வெளியேறியது **மனு**வினதும் இந்திய சலப்பிரளயத்தினதும் காலத்திலிருந்து ஆரம்பமாயதென அநுமானிக்கப்படுகின்றது. **மனு**வினுல் நடத்தப்பெற்ற ஒரு கூட்டத்தார் பார்சிய குடாக்கடல் வழியாக அராபியக்கடலைக் கடந்து இந்தியாவின் தென்மேற்குக் கரையையடைந்தனர். இத்தேசாந்தர வாசிகள் கன்னியாகுமரிக் கதிதூரத்திலில்லாத மேற்கு மலைத்தொடர்களுடைய மலையநாட்டிற் குடியேறிப் பாண்டு எனப்படும் தென் கண்டத்தில் வசிப்பாராயினர். இவர்களிலிருந்தே தென்னுட்டரசர்களாகும் பாண்டியர்களும், சம்பாவிதமாக மஹாபாரதயுத்தத்தின் வீரர்களாகும் பாண்டவர்களும் தோற்றியிருக்கலாம்.

(தொடரும்.)

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ. | விலை ச. | தபாற் செலவு ரூ. | தபாற் செலவு ச. |
|---|---|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 | 10 | 0 | 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 | 30 | 0 | 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 | 55 | 0 | 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷெ<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷெ ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷெ .. | 0 | 50 | 0 | 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 | 20 | 0 | 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 | 30 | 0 | 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 | 80 | 0 | 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 | 40 | 0 | 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 | 30 | 0 | 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 | 10 | 0 | 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 | 05 | 0 | 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 | 45 | 0 | 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 | 30 | 0 | 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 | 10 | 0 | 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் .. | 2 | 75 | 0 | 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. | 0 | 40 | 0 | 10 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.